இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி–28 | 14–11–2005 | திங்கட்கிழமை | ஓசை–270



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-13213) விநாயகர் வீதி, கிளிநொச்சி.

# தேர்தல் பணிகளைப் புறக்கணிக்குமாறு அரச ஊழியர்களிடம் வேண்டுகோள்

## யாழ். குடாநாட்டில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

***சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் பணிகளில் பங்கேற்காமல் தமிழ் அரச ஊழியர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்ட சுவரொட்டிகள் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஒட்டப்பட்டுள்ளது.***

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதில் சிங்கள அரசியல் கட்சிகள் நேர்மையாக நடந்துகொள்ளவில்லை. சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்களுக்கு அக்கறை இல்லை என்பதை நாம் வெளிப்படுத்த வேண்டும்.

ஆதலால் தமிழ் மக்களும் தமிழ் அரச ஊழியர்களும் தேர்தலைப் புறக்கணிப்போம். தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிப்பதால் யாழ்.குடாவில் தமிழ் அரச ஊழியர்கள் தேர்தல் பணிகளில் பங்கேற்பது அர்த்தமற்றது என்றும் இந்தச் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சுவரொட்டிகளை "மக்கள் படை" எனும் அமைப்பு ஒட்டியுள்ளது.

## இரண்டு இளைஞர்கள் வவுனியாவில் கைது

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் தமிழ் இளைஞர்கள் இருவர் சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களின் [illegible] எல்லை யோரத்தில் இரண்டு [illegible]க்குண்டுகள் மறைத்து வைத்திருந்ததாகக் கூறி கைது செய்யப்பட்டனர்.

## தேர்தலைப் புறக்கணிக்க திருமலை,அம்பாறை தமிழ் மாணவர் பேரவையினர் கோரிக்கை

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று திருகோணமலை, அம்பாறை தமிழ் மாணவர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ் மாணவர் பேரவை ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சிங்கள அரசியல் தலைமைகளுக்கு இடையே நடைபெறுகிற அதிகாரப்போட்டிக்கான தேர்தலில் தமிழர்கள் அக்கறை செலுத்த வேண்டியதில்லை. தென்னிலங்கை சிங்கள கட்சிகளின் பேரினவாதப் போக்கை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்ட இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

சிறிலங்கா விடுதலை பெற்ற காலத்திலிருந்தே சிங்களத்தலைவர்களால் தமிழர் ஏமாற்றப்பட்டிருக்கிறோம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் அரச நிதி முறைகேடு; ராஜபக்ஷ மீது விசாரணை நடத்துக!

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுக்காக அரசாங்கத்தின் நிதியை முறைகேடாக பயன்படுத்தும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷமீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்று ஜாதிக சேவக சங்கமய ஒருங்கிணைப்பாளர் பாலித அத்துக்கோரளை வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஏழாம் திகதி ஆங்கில ஊடகம் ஒன்றின் இணைப்பாக ஐந்து பக்க விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கக்கோரும் அந்த ஐந்து பக்க விளம்பரமானது பல்வேறு அரச நிறுவனங்களின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவின் பாதுகாப்பிற்கு இந்திய அரசு உதவத்தயார்!

### -சந்திரிகாவிடம் மன்மோகன்சிங் உறுதி

சிறிலங்காவின பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு உதவ தயாராக இருப்பதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார். பங்களாதேசின் தலை நகர் டாக்காவில் சார்க் மாநாட்டில் பங்கேற்கச் சென்ற இருவரும் சந்தித்து உரையாடினர். இச்சந்திப்பு குறித்து ஊடகவியலாளர்களிடம் இந்திய வெளிவிவகாரத்துறைச் செயலாளர் சியாம் சரண் கூறியதாவது;

இரு நாடுகளிடையே நெருக்கமான பொருளாதார உறவை மேம்படுத்துவது தொடர்பாக இருவரும் விவாதித்தனர். சிறிலங்காவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தித் துறைகளில் இந்தியா உதவி வழங்க தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்தார். சிறிலங்கா சனாதிபதி பொறுப்பிலிருந்து தாம் ஓய்வு பெறவுள்ளதை சந்திரிகா கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி உறுப்பினர் வெள்ளவத்தையில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர் திருகோணமலையைச் சேர்ந்த வல்லப்போடியார் இராசநாயகம் (வயது-36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் நேற்றிரவு வெள்ளவத்தை மாயா வீதியில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுவிட்டு முச்சக்கர வண்டியில் திரும்பிக் கொண்டிருந்த போதே இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். முச்சக்கர வண்டிச் சாரதியான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழி கலைத்திறன்போட்டி

## நாடகப் போட்டியில் கிளி. ம.வி அகில இலங்கை ரீதியில் முதலிடம்

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற தமிழ் மொழி கலைத்திறன் போட்டியில் திறந்த பிரிவில் நாடகப் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

எட்டு மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நாடகங்களில் கிளி. மகாவித்தியாலயமே அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் 500 மீற்றருக்கு அப்பால் இராணுவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் அமையவுள்ள சனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் இருந்து 500 மீற்றர் சுற்றுவட்டாரத்திற்கு அப்பால் தேர்தல் பாதுகாப்பு கடமைகளை மேற்கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான கே. கணேஷ் கூறியுள்ளார்.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்புக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிக் கூறும் போதே அவர் இதனைக் கூறினார்.எதிர்வரும் வியாழனன்று நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலுக்காக அமையவுள்ள வாக்குச் சாவடிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக கொத்தணி முறையிலேயே அமையவுள்ளன.

அந்த வகையில் முகமாலையில் அமையவுள்ள 103 சாவடிகள் கொண்ட ஒரு கொத்தணி நிலையமும் 521 சாவடிகள் கொண்ட 117 கொத்தணி நிலையமும் யாழ். குடாநாட்டில் அமையவுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கல்வி மேம்பாட்டுக்கான ஆய்வும் ஆலோசனைச் செயலமர்வும்



(அலுவலக செய்தியாளர்)

தமிழ் கல்வி மேம்பாட்டிற்கான ஆய்வும் ஆலோசனைச் செயலமர்வும் கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழீழக் கல்விக்கழகத்தினரின் அனுசரணையில் வடக்குக் கிழக்குக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் வடக்கு கிழக்கு கல்வியியலாளர்களை ஒருங்கிணைத்து இச் செயலமர்வு நடாத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனப் பயிற்சி மண்டபத்தில் ஆரம்பமான இச் செயலமர்வு தொடர்ந்து நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கல்வி ரீதியான தளர்வு ஏற்படுவதற்கான காரணங்கள் முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான கற்றல் மட்டங்களில் தளர்வு ஏற்படுவதற்கான காரணங்கள் ஆராயப்பட்டன. இதில் மாணவர்களின் அடைவுகள் பௌதீக வளப்பற்றாக் குறைகள், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் என்பன குறித்து ஆய்வு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகளும், கண்டறியப்பட்டன. இப் பிரச்சினைக்கான தீர்வுகளைப் பாடசாலையூடாக வலயக் கல்விப் பணிமனை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லை. மக்களுக்கு

# நிரந்தர வீடுகள்அமைத்துக் கொடுப்பதாகக் கூறிய அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பதாக வாக்குறுதிகள் வழங்கி செயற்பட்டுக்கொண்டிருக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான சிறப்புக் கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் 11.00 மணிக்கு முல்லை திட்ட அமுலாக்கல் செயலகத்தில் திட்டமிடல் பொறுப்பாளர் யாழ்அமுதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் நிரந்தர வீடுகள் அமைப்பதில் ஏற்படும் தாமதங்கள் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. அத்துடன் கடல்வலயத்திற்குள்ளே 200மீற்றருக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிக விரைவில் அதாவது இவ்வருடம் முடிவதற்குள் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. மழையினால் தற்காலிக குடியிருப்பில் இருக்கும் மக்கள் பெரும் அவல நிலையில் உள்ளதாகவும், அத்துடன் "நேப்"திட்டத்தின் ஊடாக உலக வங்கியின் நிதியின் ஒருங்கிணைந்த நிதிப் பங்களிப்புடனான சுனாமி வீட்டுத்திட்டம் அமைப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. தொடர்ச்சியாக திணைக்களத் தலைவர்களுடன் இந்த நிரந்தர வீடமைப்புத் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்த நிகழ்வில் நிரந்தர வீடுகள் அமைக்கும் அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## கலந்துரையாடல்

மாவீரர் நாள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் .பகல் 4.00 மணிக்கு மல்லாவி பிரதேச தொழிற்சங்க தலைவர் கோவிந்தராசா தலைமையில் இடம் பெற்றது.

இதில் மாவீரர் நாள் தொடர்பான கருத்துரைகளை மல்லாவி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.புனிதன் மாலதி படையின் மூத்த போராளி கோமதி ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் மல்லாவி பிரதேச தொழிற்சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (24)

## மன்னாரில் வங்கியாளர் தினம்

மன்னார் வங்கியாளர் தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.இலங்கை வங்கி , மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நசனல் வங்கி ஆகிய நான்கு வங்கிகளும் இணைந்து மன்னார் பொதுவிளையாட்டு அரங்கில் விளையாட்டு போட்டிகள் கலை நிகழ்வுகளை நடத்தினர்.

இந்நிகழ்விற்கு இலங்கை வங்கி முகாமையாளர் மைக்கல் தலைமை தாங்கினார். (18)

## திலீபன் மருத்துவ சேவையினரால்

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சுகாதாரக் கருத்தரங்குகள்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையினரால் சுகாதாரக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

முல்லை.மாவட்ட சுகாதார சேவையினரும் ஒட்டுசுட்டான் கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவசேவையின் முதலுதவி அணியினரும் இணைந்து மழைக்காலத் தொற்று நோய்களிலிருந்து காப்பாற்றிக்கொள்வது எவ்வாறு என்னும் தலைப்பின் கீழ் கருத்தரங்குகள் நடைபெற்றுள்ளதாக மருத்துவமனையினர் தெரிவித்தனர். 16.11.2005 கற்சிலைமடு சிலையடிக் கிராமத்திலும் 17 ஆம் திகதி 4 ஆம் கண்டம் பண்டாரவன்னி கிராமத்திலும் 18 ஆம் திகதி பேராறு கிராமத்திலும் நடைபெற இருப்பதுடன் வாய்ப்புற்று நோயினை ஆரம்பத்தில் கண்டுபிடிப்பதற்கான ஆய்வும் நடைபெறவுள்ளது.

இதன்படி கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மேற்படி கருத்தரங்கு கடந்தவெள்ளிக்கிழமை நடைபெற்றது. (05)


## புதியவாகனங்கள் விற்பனைக்கு

புத்தம்புதிய கார்,வான் போன்ற வாகனங்கள் லீசிங் முறையில் விற்பனைக்கு உள்ளன.

தொடர்புகளுக்கு:- தொலைபேசி: 0773077099, 0114921159 (சி.13221)


## அறிவித்தல்

புதிய பொதிகை அழககம் திறப்பு விழா 14.11.2005 இன்று (திங்கட் கிழமை 9.30 மணி தொடக்கம் 12.30 வரையான சுபவேளையில் பொதிகை அழககம் திறக்கப்படும் என்பதனை வாடிக்கையாளர் நண்பர்கள், அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

பொ. சூரி,
பொதிகை அழககம்,
கனகபுரம் தெரு,கிளிநொச்சி.

(6923)

## சாவு அறிவித்தல்

### செல்லையா அம்மாக்குட்டி

முள்ளியவளை காட்டவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கட்டையர் செல்லையாவின் அன்பு மனைவி அம்மாக்குட்டி 13.11.2005 நேற்றுக் காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னம்மா, பொன்னம்மா, ஆறுமுகம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத்தங்கையும், இராசமணி சின்னக்கிளி, தங்கவேணி, செல்வராணி, விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும். ச.வே. கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, கிருஸ்ணபிள்ளை, இரத்தினசிங்கம், சட்டவாளர் பரஞ்சோதி, தெய்வநாயகி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 14.11.2005 இன்று பிற்பகல் 4.00 மணியளவில் முள்ளிய வளை கப்பூரப்புல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப் படும். இத்தகவலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சட்டத்தரணியும், சட்டவாளரும்,
த. பரஞ்சோதி (மருமகன்)

(சி.13272)

## சனாதிபதித் தேர்தல் 2005.11.17
## வாக்கெடுப்பு நிலையத்திற்குட் பிரவேசிப்பதற்கு அனுமதியுள்ள ஆட்கள்

01. வாக்கெடுப்பு நிலைய அலுவலர் குழாம்.
02. கடமையிலீடுபட்டிருக்கும் பொலிஸ் அலுவலர்கள்
03. சுகாதார வலைகளுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள்.
04. தேசிய ஆளடையாள அட்டையையும் முறையான நியமனக் கடிதத்தையும் வைத்திருக்கும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், (போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் அதி கூடிய எண்ணிக்கை 2 ஆகும்)
05. வேட்பாளர்கள்,வாக்கெடுப்பு முகவர்கள்,அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், பிரதேச முகவர்கள்.
06. ஏதேனுமொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடைய, பதியப்பட்ட வாக்காளர்கள்.
07. என்னால் அதிகாரமளிக்கப்பட்ட சர்வதேச கண்காணிப்பாளர்களும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு உட் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ள உள்நாட்டு கண்காணிப்பாளர்களும்.

மேற்கூறப்பட்டோரைத் தவிர்ந்த வேறு எவரேனுமொருவர் வாக்கெடுப்பு நிலையத்திற்குள் பிரவேசித்தால் தவறொன்றைச் செய்தவராவாரென்பதுடன் சட்டத்திற்கிணங்க வழங்கப்படும் தண்டனைக்கும் ஆளாவர்.

ஆகவே நீங்கள் மேற்கூறப்பட்ட வகைகளில் எந்த ஒரு வகையிலேனும் சேராதவிடத்துவாக்கெடுப்பு நிலையத்தினுள் பிரவேசிக்க வேண்டாம்.

உங்கள் வாக்கெடுப்பு நிலையத்தினுள்ளும் சுற்றாடலிலும் அமைதிகாக்க பொலிசுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

*தேர்தல் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*ராஜகிரிய,*
*2005 நவம்பர் மாதம் 08 ஆம் திகதி*

*தயானந்த திசாநாயக்க,*
*தேர்தல்கள் ஆணையாளர்.*

(சி.13329)


## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

11.11.2005 அன்று கிளிநொச்சிக்கும் விசுவமடுவுக்கும் இடைப்பட்ட பகுதியில் பரஞ்சோதி கண்ணன் என்பவரின் அடையாள அட்டை (743611101-V) அடங்கிய பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பேருந்துப்பகுதி கிளிநொச்சி பணிமனையில் ஒப்படைக்கவும். (6922)

### விற்பனைக்கு

மஞ்சுளா பேக்கரிச் சந்திக்கு அருகாமையில் உள்ள இல-85 திருநகர் கிளிநொச்சி காணி உடன் விற் பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். (6427)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன்செய்துகொள்ளவும். போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும். பிள்ளையார் பொத்தகசாலை, கண்டி வீதி-கிளிநொச்சி.

TP-2285750- (சி.13263)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணனி அச்சுப் பதிப்புத் துறையில் புதிய நுட்பங்களை உருவாக்கக்கூடிய

**Adobe Pagemaker**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

*தொடர்புகட்கு:*

வின்நெற் கணனி பயிற்சி நிலையம், டிப்போ வீதி,கிளிநொச்சி

(சி.13074)

## வேலை வாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 2 1/2 மாதத்திற்குள்.

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆள்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத்தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | - |
| எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புபவர் | 400 | - |
| வாகனம் கழுவுபவர்கள் | 200 | - |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்.

சகல நாடுகளுக்கும் செல்லக் கூடிய கடவுச்சீட்டு, பாஸ்போட் அளவு படம் 15 (கலர்), வீட்டுப் பணிப் பெண்கள் 200 பேர். வயதெல்லை 19 – 45 ,சம்பளம் 20000.

தொடர்பு – 0777 279813 மைக்கல்.

குறிப்பு முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்புக்கள் உள்ளன.பயணம் 2 1/2 மாதத்திற்குள்.

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சுவேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாட்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| எஸ்பிறே பெயின்ரர்/ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின், றேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர்,எஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்). | 20 |
| கைற்றொனிக் மெக்கானிக். | 10 |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்.

பாஸ்போட்,பாஸ்போட் அளவு புகைப்படம் 05,

குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.

தொடர்பு – 0777 279813 மைக்கல்.

குறிப்பு :- முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(6919)

# ஜோதிடத்தின் மீது உச்சக்கட்ட நம்பிக்கை தலைநகரை இரகசியமாக மாற்றியது மியான்மர்

(பாங்கொக்)

*மியான்மர் நாட்டின் தலைநகரை ரங்கூனில் இருந்து பின்மனாவிற்கு அந் நாட்டு இராணுவ அரசு திடீரென மாற்றியுள்ளது. இதனால் மியான்மரில் குழப்பமான சூழல் உருவாகியுள்ளது. தெற்காசிய நாடுகளில் ஒன்றான மியான்மரில் இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. இந்த அரசு ஜோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டது.*

தற்போது ஜோதிடர்களின் ஆலோசனையைக் கேட்டு விபரீத செயலில் மியான்மர் இராணுவ அரசு ஈடுபட்டுள்ளது. கடந்த ஆறாம் திகதி காலை 6.37 மணியளவில் அந்நாட்டு அரசு நிர்வாகங்களின் முக்கிய ஆவணங்களை சீன டிரக்குகளில் ஏற்றப் பட்டு பின்மனா நோக்கிப் புறப்பட்டன.


இந்தத் திடீர் மாற்றம் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஏதும் வெளியிடப்படாததால் மியான்மரில் இருந்த வெளி நாட்டு தூதரக அதிகாரிகள் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்தனர். அந்நாட்டு மக்களும் பெரும் குழப்பத்தில் சிக்கித்தவித்தனர்.

மியான்மரை அமெரிக்கா ஆக்கிரமித்து விடும் என்ற ஜோசியக் கணக்குத்தான் தலைநகர் மாற்றத்துக்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலீசாரைஸ் கடந்த சனவரி மாதம் சர்வாதிகார அரசு நடக்கும் நாடுகளின் பட்டியலில் மியான்மரையும் சேர்த்து அறிவிப்பு வெளியிட்டார். இந்தப் பட்டியலில் வடகொரியா, கியூபா, ஈரான், சிம்பாப்வே, பெலாரஸ் ஆகிய நாடுகள் ஏற்கனவே இடம் பெற்றுள்ளன. எனவே மியான்மர் மீது அமெரிக்கா எந்த நேரத்திலும் நடவடிக்கை எடுக்கலாம் என்ற பீதி இராணுவ அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

வங்கக் கடலோரமாக சிதைந்து போன நிலையிலுள்ள ரங்கூனைத் தலைநகராகக் கொண்டால் அது இராணுவ ஆட்சியாளர்களின் தலைமைக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று சில ஆண்டுகளுக்கு முன் ஜோதிடர்கள் அச்சத்தை வெளிப்படுத்தி இருந்தனர். இது கூட தலைநகர் மாற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று மற்றொரு தகவல் தெரிகிறது.

இது குறித்து வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்ட போதும் மியான்மர் இராணுவ அரசு அதைப் பற்றி சிறிது கூடக் கவலைப்படவில்லை. மியான்மரை ஒரு நவீன அரசாக மாற்றும் முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாட்டின் வளர்ச்சிக்காக இந்த மாற்றம் தவிர்க்க இயலாதது" என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் செயற்படும் முன்னணி பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர் இது பற்றிக் கூறுகையில்; மியான்மர் அரசு ஜோதிடர்களின் ஆலோசனையின் படியே தலைநகர் மாற்றத்தை செய்துள்ளது என்றார்.



நியூயோர்க்கில் பொலிஸ் தலைமைச் செயலகத்தில் வெடிகுண்டுகளை கண்டு பிடிக்கும் பல வசதிகள் நிறைந்த நவீன கருவிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

# இந்தோனேசிய போதைப்பொருள் ஆலை பொலிசாரிடம் சிக்கியது

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய தலைநகர் ஜகார்தாவில் இருந்து 75 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் செரோவ் என்ற இடத்தில் பொலிசார் அதிரடி சோதனை நடத்தி போதைப்பொருள் தயாரிக்கும் இரகசிய ஆலை ஒன்றைக் கண்டு பிடித்தனர். அங்கிருந்து 300 பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த 100கிலோ எடையுள்ள போதைப் பொருளைக் கைப்பற்றினார்கள்.

இது தொடர்பாக ஐரோப்பியர் இரண்டு பேர், சீனாவைச் சேர்ந்த நான்கு பேர் உட்பட 12பேரைப் பொலிசார் கைது செய்தனர். பொலிசார் கூறும்போது, மிகப்பெரிய போதைப்பொருள் வேட்டை இது என்று கூறினார்.

# பரிஸ் கலவரம் வலுக்கிறது; மீண்டும் கார்கள்–கடைகள் எரிப்பு

(பரிஸ்)

பிரான்ஸ் நாட்டில் குடியேறி இருக்கும் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் கடந்த 16 நாட்களாக கலவரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். முக்கிய நகரங்களில் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சில நாட்கள் குறைந்திருந்த வன்முறைச் சம்பவங்கள் நேற்று முன்தினம் மீண்டும் வலுவடைந்தது. இதனால் பொலிசாருக்கு மீண்டும் தலைவலி ஏற்பட்டது.



பரிஸ் புறநகர் பகுதியில் 309 கார்களும், இரண்டு கடைகளும் தீவைத்து எரிக்கப்பட்டன. ஒரு கும்பல் பாடசாலை ஒன்றிக்குள் சென்று சூறையாடியது. மின்சார டிரான்ஸ்பார்மரைச் சேதப்படுத்தியதால் அந்தப்பகுதி முழுவதும் மின்சாரத்தடை ஏற்பட்டது.

இந்நிலையில் பிரான்ஸ் பொலிசாருக்கு உதவி செய்ய ரஷ்யா முன்வந்திருக்கிறது.

ரஷ்யாவின் இடதுசாரி அரசியல் கட்சியைச் சேர்ந்த ஜிரினோவ்ஸ்கி என்பவர் பிரான்ஸ் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள தந்தியில் "எங்களிடம் அடி தடியில் புகழ்பெற்ற கால்பந்து முரட்டு ரசிகர்கள் இருக்கிறார்கள். எப்படிப்பட்ட கலவரத்தையும் இவர்கள் 48 மணி நேரத்தில் அடக்கிவிடுவார்கள். அவர்களது உதவி தேவை என்றால் நூற்றுக்கணக்கில் அவர்களைப் பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைக்கத்தயாராக இருப்பதாக" கூறியுள்ளார். இந்த உதவியைப் பிரான்ஸ் ஏற்றுக்கொள்ளுமா என்பது தெரியவில்லை.

# ஐ.நா பொதுச்செயலாளர் கொபிஅனான் பாக்தாத்துக்கு இரகசிய பயணம்

(பாக்தாத்)



ஐ.நா. பொதுச்செயலாளர் கொபி அனான் பலத்த பாதுகாப்புடன் ஈராக்கிற்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். ஈராக்கில் கடந்த 2003ஆம் ஆண்டு அமெரிக்க படை தாக்குதல் நடத்தி சதாம் ஹுசேன் ஆட்சியை அகற்றியது.

அதன் பிறகு அங்கு புதிய ஆட்சி அமைக்கப்பட்டபோதும் அமெரிக்கப் படைகள் அங்கேயே தங்கியுள்ளனர்.

அமெரிக்கப் படைகளுக்கு எதிராக சதாம் ஆதரவு தீவிரவாதிகள் தொடர்ந்து தற்கொலைப்படைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் ஈராக்கின் துணைப்பிரதமர் அகமது சலாபி அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் அடுத்த ஆண்டு முழுவதுமாக வெளியேறிவிடும். இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் ஐ.நா. பொதுச்செயலாளர் கொபி அனான் ஈராக்கிற்கு ரகசிய பயணம் மேற்கொண்டுள்ளார். பலத்த பாதுகாப்புடன் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். அவரது இந்தத் திடீர் பயணத்திற்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் அடுத்த மாதம் (டிசம்பர்) 16ஆம் திகதி நடக்க இருக்கும் பாராளுமன்றத் தேர்தல்களை கண் காணிப்பது தொடர்பாக அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டதாக தெரிகிறது.

கொபி அனான் பாக்தாத் வந்த அதே நேரத்தில் அங்குள்ள ஒரு மார்க்கெட்டில் கார்க் குண்டு வெடித்தது. இதில் ஐந்து பேர் உடல் சிதறிப் பலியானார்கள்.

# "சார்க்" அமைப்பில் ஆப்கான் எட்டாவது நாடாக இணைவு




'சார்க்' கூட்டமைப்பில் ஆப்கானிஸ்தான் எட்டாவது நாடாக இணைந்து கொண்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், நேபாளம்,வங்கதேசம் இலங்கை, மாலைதீவு மற்றும் பூட்டான் ஆகிய ஏழு நாடுகளின் கூட்டமைப்பான 'சார்க்' நாட்டு தலைவர்களின் 13ஆவது மாநாடு வங்கதேச தலைநகர் டாக்காவில் நேற்று முன்தினம் ஆரம்பமானது. மாநாட்டைத் தொடங்கி வைத்து பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீஸ் பேசியபோது:-

சார்க் அமைப்பில் சேர ஆப்கானிஸ்தான் நாடு விண்ணப்பித்துள்ளது. தெற்கு ஆசிய கூட்டமைப்பில் (சார்க்) பேச்சுவார்த்தை நடத்துவதற்கான உரிமை அல்லது கண்காணிப்பாளர் என்ற அந்தஸ்தை வழங்க வேண்டும் என்று சீன நாடு கோரியுள்ளது. ஆப்கானிஸ்தான் மற்றும் சீனாவின் கோரிக்கைகள் சார்க் அமைப்பு செயலகம் மூலம் உறுப்பு நாடுகளுக்கு வந்துள்ளன. இந்த இரு நாடுகளும் சார்க்கில் சேருவதை நாங்கள் (பாகிஸ்தான்) ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம் என்றார். இதனையடுத்து இடம் பெற்ற விவாதத்தில் ஆப்கானிஸ்தான் எட்டாவது உறுப்பு நாடாக "சார்க்" அமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. சீனாவைப் பார்வையாளராக அங்கீகரிக்க இந்தியா தயக்கம் காட்டியுள்ளது. அடுத்த "சார்க்"உச்சி மாநாடு இந்தியாவில் நடைபெறவுள்ளது.

# பாக். பூகம்ப நிவாரணத்துக்கு ரூ.26 ஆயிரம் கோடி தேவை நிதி திரட்ட சர்வதேச மாநாட்டை முஷாரப் கூட்டுகிறார்

## - இந்திய பிரதிநிதிகளுக்கும் அழைப்பு

(இஸ்லமபாத்)

பூகம்ப நிவாரணப் பணிகளுக்கு நிதி திரட்ட சர்வதேச மாநாட்டை பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூட்டியிருக்கிறார். இதில் பங்கேற்க இந்திய பிரதிநிதிகளுக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் கடந்த மாதம் எட்டாம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தில் 73 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். ஒரு இலட்சம் பேர் காயமடைந்தனர். பல இலட்சம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

இங்கு மறு சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிக்கு ரூ.26 ஆயிரம் கோடி தேவைப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி மதிப்பீடு செய்துள்ளது. பல்வேறு நாடுகள் நிதியுதவி செய்ய முன்வந்துள்ளன. ரூ.12ஆயிரம கோடி வழங்க உறுதி அளித்துள்ளன. என்றாலும் இதுவரையில் இந்த நாடுகளில் இருந்து பாகிஸ்தானுக்கு ரூ.1,000 கோடியே வந்து சேர்ந்துள்ளன.

இந்தியா ரூ.125 கோடிக்கு உதவி வழங்குகிறது. ஏற்கனவே ஒரு விமானம், இரண்டு தொடருந்துகள் மூலம் 275 டன் உதவிப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தவிர தன்னார்வ நிறுவனங்கள் மூலம் 12,500 கூடாரம், மூன்று இலட்சம் போர்வைகள் மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. கடந்த ஏழாம் திகதி எல்லை திறந்து விடப்பட்டபிறகு 27 பாரவூர்திகளில் நிவாரணப் பொருட்களும் அனுப்பப்பட்டன.

இந்த நிலையில் உலக நாடுகளில் இருந்து மேலும் நிதிதிரட்டுவதற்காக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் சர்வதேச மாநாட்டை கூட்டியுள்ளார்.

வருகிற 19 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் 69 நாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பூகம்ப மறுசீரமைப்புப் பணியில் இந்தியா பங்கேற்க விரும்புவதாக பிரதமர் மன்மோகன்சிங், பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீசுக்குக் கடிதம் எழுதியிருந்தார். இந்த மனிதாபிமான உதவியை ஏற்பதாக பாகிஸ்தான் நேற்று முன்தினம் அறிவித்தது.

அதிபர் முஷாரப் 19 ஆம் திகதி கூட்டியிருக்கும் மாநாட்டில் பங்கேற்கவும் இந்தியாவுக்கு அழைப்பு விடுத்தது. இதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதிநிதிகள் குழு செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உளவு அறியும் ஆமைகள்

இராணுவம் பற்றிய இரகசியங்களை உளவு அறிய ஆமைகளைப் பயன்படுத்தலாம் என்கிறார் ரஷ்ய பல்கலைக்கழக விஞ்ஞானி அலெக்சிபுரிகோவ்.

"ஆமைகளின் ஓடு ஜதுவானது அவற்றில் ரகசிய கமராவை பொருத்தி அதை ரிமோட் கண்ட்ரோல் மூலம் இயக்கி, யாரும் செல்ல முடியாத பகுதிகளுக்கும் அந்த ஆமையை பயன்படுத்தி உளவு பார்க்கலாம். எதிரிகளின் தலைமை நிலையத்தில் குண்டுகளை வைப்பதற்கும் இந்த ஆமைகளைப் பயன்படுத்த முடியும்" என்கிறார், அந்த விஞ்ஞானி.

# கிளி.தபாலகத்தில் 16 வருடங்களுக்குமேல் நாளாந்த வேதனத்தில் பணி புரியும் ஊழியர்கள்

## -தபாலகமும் மிக மோசமான நிலையில்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மத்திய தபாலகத்தில் கடமைபுரியும் ஊழியர்களில் பலர் பலவருட காலமாக நாளாந்த வேதனத்தில் பணிபுரிந்து வருவதாகத் தெரியவந்துள்ளது.**

கடந்த 16 வருடங்களுக்கு மேலாக மேற்படி தபாலகத்தில் 13 அஞ்சலர்களும், மூன்று தந்தித் தூதுவர்களும், நான்கு தபால் ஓடிகளும், ஒரு சுத்திகரிப்பு ஊழியருமாக மொத்தம் 21 ஊழியர்கள் நாளாந்த வேதனத்தில் தற்காலிக ஊழியர்களாகப் பணிபுரிந்து வந்தனர்.



அண்மையில் இவர்களில் இருவர் நிரந்தர ஊழியர்களாக உள்வாங்கப்பட்ட நிலையில் மிகுதி 19 ஊழியர்களும் 16 வருடங்களுக்கு மேலாக தற்போதும் நாளாந்த வேதனத்திலேயே தற்காலிக ஊழியர்களாகக் கடமைபுரிந்து வருகின்றனர்.

மேற்படி தொழிலாளர்கள் சம்பந்தமாக தபால் அத்தியட்சகர் அலுவலகத்துடன் பல தடவைகள் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகைகள் விடப்பட்ட பொழுதிலும் இதுவரை அதற்கான எந்தவிதப் பயனும் கிட்டவில்லை யென மேற்படி ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஊழியர்களின் நியமனம் தொடர்பான விடயங்களில் 01.05. 1992 இல் தபால் திணைக்கள மேலிடத்தினர் விட்ட தவறினாலேயே ஊழியர்கள் தங்களுக்கு இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மத்திய தபால் பரிவர்த்தன நிலையம் போன்று இயங்கும் கிளிநொச்சி மத்திய தபாலகம் எந்தவித அடிப்படை வசதிகளுமற்ற நிலையில் இடிந்த கட்டடப்பகுதியில் மழை ஒழுக்குகளுக்கு மத்தியில் தற்போது பணியினை மேற்கொண்டு வருவது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

போரின் தாக்கத்தினை முற்று முழுதாகச் சித்தரிக்கும் திணைக்களக்கட்டடமாகக் கிளி.நகரில் சேவையின்றிகாட்சிதரும் ஒரேயொரு கட்டடம் கிளிநொச்சி மத்திய தபாலகம்என்பது குறிப்பிடத்தக்கது. (சோ)

# மாவீரர் தினத்தை முன்னிட்டு வர்த்தகர்கள் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி நகர வர்த்தக உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி வர்த்தகர் சங்கத் தலைவர் பாபு தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் அருள், கிளிநொச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பா ளர் போர்ப்பிரியன் ஆகியோர் கலந்து மாவீரர் தினத்தை முன்னிட்டு மேற் கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து வர்த்தக உரிமையாளர்களுடன் கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டதுடன், சிரமதானப் பணிகள் தொடர்பான ஏற்பாடுகளும் கலந்தாலோசிக்கப்பட்டன.

இதன் பிரகாரம் எதிர்வரும் 17ஆம் திகதியன்று கிளிநொச்சி வர்த்தகர்கள் கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப்பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். கிளிநொச்சிப் பிரதேச அரசியல்துறையினரால் மேற்படி கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# திலீபன் மருத்துவ சேவையினரால் "வருமுன் காப்போம்" சேவை

(அலுவலக செய்தியாளர்)

நயினாமடு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரின் புதிதாக அமைக்கப்பட்ட சுகாதார விழிப்புக் குழு அணியினரும் திலீபன் மருத்துவ சேவையின் தொண்டர்களும் இணைந்து "வருமுன் காப்போம்" கிராம ரீதியாக நடமாடும் மருத்துவ சேவையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் வீட்டுத்தரிசிப்புச்செய்து தொற்றுநோய் வராது தடுக்க முன்கூட்டியே நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதோடு அதற்கான விழிப்புணர்வுக்கருத்துக்கள் மக்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்பட்டுவருகின்றன

அத்தோடு வாய்ப்புற்றுநோய் எவ்வாறு ஏற்படுகின்றது என்பதனைக் கூறுவதோடு வருமுன் எவ்வாறு தடுக்கலாம் என்ற கருத்துக்களையும் வழங்கிவருவதுடன் குறிப்பிட்ட வயதிற்கு மேல் உள்ள ஆண்,பெண் இருபாலாருக்குமான வாய்ப்புற்று நோய் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு அதற்கான மருத்துவ சேவையும் வழங்கப்பட்டு வருகின்றன. (தீ)

# மாவீரர் நாள் தொடர்பான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

2005 நவம்பர் 27 மாவீரர் நாளை முல்லை நகர்ப்பகுதியில் வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல் முல்லை.மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறை கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு கடற்புலிகளின் முல்லை. நகரத் தளபதி க.தினேஷ் தலைமையில் நடைபெற்றது.

எதிர்வரும் 25 ஆம் திகதி தமிழீழ தேசியக்கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். இந் நிகழ்வு வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளதோடு, முல்லை.நகரப்பகுதியில் நூறு அடி உயர பிரமாண்டமான மாவீரர் நினைவாலயம் அமைப்பதோடு இரு மேடைகள் அமைக்கப்பட்டு மாவீரர் நினைவுக் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளதென முல்லை.மாவாட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். 25,26 ஆம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெறும் இந் நிகழ்வு 27ஆம் திகதி கடலில் மாவீரர் நினைவான சுடர் ஏற்றப்படும் எனவும், இதற்கான வேலைத்திட்டம் பிரித்துக்கொடுக்கப்பட்ட ரீதியில் நடைபெறும் எனவும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)



*(அலுவலக செய்தியாளர்)*

*கிளி.மாவட்ட வைத்தியசாலையின் மருந்துக்களஞ்சியம் மத்த இடநெருக்கடிக்கு மத்தியில் சிறிய தகரக் கொட்டகையில் இயங்கி வருவதனைக் காணக் கூடியதாவுள்ளது.*

*மேற்படி நெருக்கடிக்குள் இயங்கும் மருந்துக்களஞ்சியத்தின் ஒரு சிறு பகுதியிலேயே தற்போது இயன் மருத்துவ சிகிச்சை இடம் பெற்று வருகின்றது. மருந்துக்களஞ்சியத்தின் ஒரு பகுதியில் இயன்மருத்துவ சிகிச்சை இடம் பெறும் பகுதியினை (படுக்கை) வட்டமிட்டு காண்பிக்கப்பட்டுள்ளதனைப் படத்தில் காணலாம். (படம் சோதி)*

# அங்காடி வியாபாரிகளுக்கான த.சு.சேவையினரின் அறிவுறுத்தல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதாரசேவைகள் தொற்று நோய் தடுப்புப் பிரிவினரால் தொற்று நோய்கள் பரவாது தடுக்கும் முகமாக தாயகப் பிரதேச அங்காடி வியாபாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

*பழுதடைந்த வியாபாரப் பொருட்களை எக்காரணம் கொண்டும் வியாபாரம் செய்யும் பொருட்களுடன் சேர்த்து வைத்திருத்தல் கூடாது.

*புலால் கழிவுகளை சம்பந்தப்பட்டவர்களுக்கூடாக காலதாமதமின்றி தினமும் அகற்ற வேண்டும்.

*வியாபாரம் செய்பவர்கள் தமக்குரிய பகுதியை சுத்தமாகப் பேணுதல் வேண்டும்.

*வெற்று ரின்கள், பொலித்தீன், பழுதான பிற கழிவுகளைப் பொது இடங்களில் போடாமல் அறிவுறுத்தப்பட்ட பைகளில் போட்டு உரிய முறையில் கழிவகற்றஉதவ வேண்டும் என்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (சோ)

# திலீபன் மருத்துவசேவையினர் நெடுங்கேணியில் பற்சிகிச்சை

(நெடுங்கேணி)

இன்று திங்கட்கிழமை நெடுங்கேணி பாடசாலையில் பற்சிகிச்சை நடைபெறவுள்ளது. இதில் பல்பிடுங்குதல் ,பல்சுத்தம் செய்தல், பல் அடைத்தல் போன்றவற்றுடன் பற்சுகாதாரம் சம்பந்தமான அறிவுரைகளும் வழங்கப்படவுள்ளன. இதில் கலந்து கொண்டு அனைவரும் பயன்பெறுமாறு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் கேட்டுள்ளனர். (தீ)



*உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால் பகுதியில் காணி வேலிக் கழிவுகளை வடிகாலில் கொட்டியுள்ளதன் காரணமாக மழைவெள்ளம் வீதியை மேவிப் பாய்வதனால் வீதிசேதமடைந்துள்ள தனைப் படத்தில் காணலாம். (படம்–சோதி)*

# பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் பனம் விதைகள் நாட்டல்

(கிளிநொச்சி)

பனைவளத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வருடந்தோறும் பனம் விதை நடுகைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கண்டாவளைப்பிரதேசத்தில் 7000 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கு பிரமந்தனாறு மயில்வாகனபுரம் மகாவித்தியாலயத்தில் கண்டாவளைப் பிரதேச இணைப்பாளர் நா.காசிநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பனம்விதை நடுகையை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட இணைப்பாளர் ச.விநாயகமூர்த்தி ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கமக்கார அமைப்புத்தலைவர் சி.பத்மநாதன் விதைகளை நாட்டினார். அதனைத் தொடர்ந்து மக்களால் பாடசாலை வளாகத்திலும், பொது மக்களின் காணிகளிலும் பெருமளவு பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. இதில் மொத்தமாக 7000 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை முழங்காவில் பிரதேசத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர் க.றஞ்சன்குமார் தலைமையில் கமக்கார அமைப்பினரும், மக்களும் இணைந்து 15000 பனம் விதைகள் ஜெயபுரம் தெற்கு, ஜெயபுரம் வடக்கு, கரியாலைநாகபடுவான், முழங்காவில் 19 ஆம் கட்டை ஆகிய பகுதிகளிலும் நடுகை செய்யப்பட்டன.

இந்நிகழ்வுகளில் பெருமளவு மக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். தீவகப் பகுதியின் சில இடங்களுக்கு முழுமையாக வழங்கப்படாத வாக்காளர் அட்டை

யாழ். தீவகப்பகுதியில் சில இடங்களுக்கு வாக்காளர் அட்டைகள் முழுமையாக விநியோகிக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

யாழ். குடாநாட்டில் உள்ள வாக்காளர்கள் எதிர்வரும் சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் வாக்களிப்புச் செய்வதற்கான வாக்காளர் அட்டை விநியோகம் தற்பொழுது குடாநாடெங்கும் பரவலாக இடம் பெற்றுவருகிறது.

எனினும் இவ்வாக்காளர் அட்டை விநியோகம் தீவகத்தில் உள்ள தூரப்பிரதேசங்களில வாழும் வாக்காளர்களுக்கு முழுமையாக விநியோகிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் தமிழ் மக்கள் முற்று முழுதாக சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்புச் செய்வதற்கு தீர்மானித்திருப்பதனால் இவ் வாக்காளர் அட்டைகள் தமக்கு விநியோகிக்கப்படாமை குறித்து எதுவித அக்கறையுமின்றியுள்ளனர்.

வாக்காளர் அட்டைகளை தூரப் பிரதேசங்களுக்கு கொண்டு சென்று விநியோகிப்பதற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காணப்படுவதனாலேயே இவ் வாக்காளர் அட்டை விநியோகம் முழுமையாக இடம்பெறவில்லை என அதிகாரிகள் கூறினர்.

# வடமராட்சி இடைத்தங்கல் முகாமில் இலையான்களின் பெருக்கம் அதிகரிப்பு

யாழ். வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்து வரும் இடைத்தங்கல் முகாம்களில் இலையான்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்களில் குடியிருப்புக்கள் நெருக்கமாகக் காணப்படுவதாலும் மக்கள் செறிவு அதிகமாகக் காணப்படுவதாலும் இவ் இலையான்களின் பெருக்கம் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இவ் இடைத்தங்கல் முகாம்களில் வாழ்வோருக்கு தொற்று நோய் பரவக் கூடிய அபாயம் உள்ளது என சுகாதாரப்பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது யாழ்.குடாநாட்டில் பெய்துவரும் அடை மழைகாரணமாக இவ் இலையான்களின் பெருக்கம் பொது மக்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இவ் இலையான்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எவரும் தக்க நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு யாழ். குடாநாட்டு இளைஞர்கள் கோரிக்கை

*(யாழ்ப்பாணம்)*

***எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலை நிராகரிப்பதன் மூலம் வடக்கு, கிழக்கு மக்களாகிய நாம் இனியும் சிங்கள ஆட்சியாளரை நம்பத் தயாரில்லை என்பதை நிரூபிப்போம்! என்னும் தலைப்பில் வடமராட்சி இளைஞர்களால் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப் பட்டுள்ளன.***

இவ்வாறு வடமராட்சிப் பகுதியில் தேர்தலை நிராகரிக்கக் கோரி 12.11.2005 அன்று இளைஞர்களால் விநியோகம் செய்யப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பொங்குதமிழ் ஊடாக எமது உரிமையையும் விருப்பத்தையும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியதன் ஊடாக இன்று சர்வதேசம் தமிழனை திரும்பிப் பார்க்கத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் சர்வதேசத்தையும் தமிழரையும் ஏய்த்துவரும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களாகிய எங்களை பகடைக் காய்களாக வைத்து சனாதிபதித் தேர்தல் நடாத்த முற்படுகின்றனர். எமது வளங்களான வீடுகள், ஆலயங்கள் விவசாயப் பெருநிலங்கள் கடல்வளங்கள் போன்ற இன்னோரன்ன வளங்களை உயர் பாதுகாப்புவலயம் என்ற போர்வையில் முடக்கி வைத்துள்ள இனவெறி பிடித்த ஆட்சியாளர்கள் தமிழனுக்கு எதிராக அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் என்பவற்றின் ஊடாக எமக்கிழைத்த கொடுமைகளையும், இழைத்துக் கொண்டிருக்கின்ற கொடுமைகளையும் இன்னமும் நாம் மறந்துவிடவில்லை.

தமிழனுக்கு என்று தனித்துவமான மொழி இருந்தும் அவனுக்கு என்று நிலம், நீர் மற்றும் கலை கலாச்சாரம் போன்ற அனைத்து வளங்கள் இருந்தும் தொடர்ந்தும் அகதியாகவும், அனாதையாகவும் வாழ்கின்ற இந்த நிலையில் வருகின்ற சனாதிபதித் தேர்தலை மக்களாகிய நாம் நிராகரிக்க வேண்டியவர்கள் ஆகின்றோம்.

1948 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஏறக்குறைய 50 வருடங்களாக தமிழன் அகிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் தமது உரிமையைப் பெற முயன்றிருக்கிறான். மீண்டும் அகிம்சையிலே போராடிக்கொண்டிருக்கின்ற நாம் கடந்த வருடம் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின்போது எமது மக்களுக்கு பணியாற்ற விரும்பிய, பணியாற்றிக் கொண்டிருந்த எமது உறவுகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளோடு ஏற்படுத்திய பொதுக்கட்டமைப்பை, சட்டம் என்ற போர்வையில் சதிசெய்துகொண்ட சிங்கள ஆட்சியாளர்கள் நிராயுதபாணிகளாக வடகிழக்கிலே அரசியல் பணிகளை மேற்கொண்டுவந்த எமது உறவுகளை சுட்டுத்தள்ளியது. விடுதலைப் புலிகள் அகிம்சை வழியிலே திரும்பிவிட்டால் நாம் அரசியற் பணிகளிலிருந்து ஒதுங்கிக் கொள்வோம் என்று சொன்ன ஈ.பி.டி.பி போன்ற தேசத்துரோகிகளுடன் இணைந்து இன்று சர்வதேசம் வரை தமிழனையே பயங்கரவாதி என்று சொல்லிக்கொண்டு யாரிடம் சனாதிபதித் தேர்தலுக்கு வருகிறார்கள்? தனி பௌத்த சிங்கள நாடு என்று கூறும் ஜே.வி.பி ஹெல உறுமய என்பவற்றோடு இணைந்து நின்ற மகிந்த ராஜபக்ஷவும் தமிழனுக்கு தீர்வு தரப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டு அவசர காலச் சட்டத்திற்கு கையொப்பம் இடும் ரணில் விக்கிரமசிங்க போன்றோரும் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் காலத்தை இழுத்தடித்து தமிழனுடைய சுதந்திர உணர்வை மழுங்கடித்துவிடலாம் எனக் கருதுகிறார்கள். இந்நிலையில் தமிழர்களாகிய நாம் விழிப்படைய வேண்டியவர்களாகிறோம். எனவே வருகின்ற சனாதிபதித் தேர்தலில் வைக்கப்படுகின்ற வாக்குப்பெட்டிகள் வடகிழக்கில் இருந்து வெறும் பெட்டிகளாகப் போக வேண்டுமென்றால் தமிழர்கள் ஒவ்வொருவரும் வாக்குச் சாவடிக்குச் செல்லாது தமது சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்கான விடுதலை நாளாக கழிக்க வேண்டும் என்ற பெரு உண்மையோடு தமிழ் இளைஞர்களாகிய நாம் இவ் அன்பான அறிவித்தலை விடுக்கிறோம், இவ்வறிவித்தலை மீறிச் செயற்படுபவர்கள் தமிழினத்தின் துரோகிகளாக இளைஞர்களாகிய எம்மால் கருதப்படும். (கா)

# யாழ்.இல் இயக்கமின்றியிருக்கும் தொழிற்சாலைகளை மீளியக்கம் செய்வதில் அரசு அசமந்தப்போக்கு

யாழ். மாவட்டத்தில் இயக்கமற்றிருக்கும் தொழிற்சாலைகளை மீளியக்கம் செய்வதில் அரசாங்கம் அக்கறையின்றி இருப்பதாக யாழ்ப்பாண மாவட்ட தொழிற்திணைக்கள அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசாங்கத்தின் இத்தகைய அசமந்தப் போக்கின் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தின் தொழிற்துறை மேம்பாடும், அபிவிருத்திகளும் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் காரணமாக யாழ். குடாநாட்டில் உள்ள 95 வீதமான தொழிற்சாலைகள் சேதமாக்கப்பட்டும், முற்றாக அழிக்கப்பட்டும் இயக்கமின்றிய நிலையில் உள்ளன.

இதனால் இவ்வாறான தொழிற்சாலைகளில் பணியாற்றிய ஆயிரக்கணக்கான ஊழியர்கள், தொழிலாளர்கள் தொழிலின்றி நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட இத் தொழிற்சாலைகள் இயக்கமற்று இருப்பதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் தமக்கு கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்புகளை இழந்துள்ளனர்.

இயக்கமற்றிருக்கும் தொழிற்சாலைகளை மீளியக்கம் செய்வதில் அரசாங்கம் கடைபிடித்து வரும் அசமந்தப் போக்கினால் யாழ்ப்பாண மாவட்டத்தின் தொழில்தரமும் வீழ்ச்சிகண்டுள்ளது. (33)

# யாழ். குடாநாட்டு பொலிஸ் நிலையங்களுக்கான பாதுகாப்பு என்றுமில்லாதவாறு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கான பாதுகாப்புகள் என்று மில்லாதவாறு அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக சிறிலங்கா பொலிசாரை இலக்குவைத்து இனந்தெரியாத நபர்களினால் திடீர் தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறான சம்பவங்களில் மூன்று பொலிசார் கொல்லப்பட்டிருப்பதுடன் எட்டுப் பொலீசார் காயமடைந்தும் உள்ளனர்.

இதனால் சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழ்நிலைகளை அடுத்தே யாழ். குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம், அச்சுவேலி பொலிஸ் நிலையம், கோப்பாய் பொலிஸ் நிலையம், பருத்தித்துறை பொலிஸ் நிலையம், நெல்லியடிப் பொலிஸ் நிலையம், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம், ஊர்காவற்துறை பொலிஸ் நிலையம், சாவகச்சேரி பொலிஸ் நிலையம் என சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலீஸ் நிலையங்களுக்கான பாதுகாப்புக்காக ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் பொலிஸ் நிலைய சுற்றாடலில் இவர்கள் ரோந்துப்பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (33)

# தொடரும் கன மழையால் யாழ். குடாவில் நெற்செய்கை பாதிப்பு

யாழ். குடாநாட்டில் பெய்துவரும் கன மழை காரணமாக நெற்செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

வங்கக்கடலில் ஏற்பட்டிருக்கும் தாழமுக்கம் காரணமாக யாழ். குடாநாட்டில் கடந்த 11தினங்களாகக் கனமழை பெய்து வருகிறது.

இதனால் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளம் வயல்நிலங்களில் தேங்கி நிற்பதால் வயல்கள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

வரம்புகளின் மட்டத்திற்கு தேங்கிநிற்கும் வெள்ள நீரில் மூழ்கி நிற்கும் நெற்பயிர்கள் அழுகியும், வெள்ளத்தால் அள்ளிச் செல்லப் பட்டும் நோய் [illegible]க்கங்களுக்குள்ளாகியும் காணப்படுகின்றன.

இதன் காரணமாக குடாநாட்டு விவசாயிகள் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகியிருக்கின்றனர். இது இவர்களது பொருளாதார மேம்பாட்டினைப்பெரிதும் பாதித்துள்ளது. இது இவ்வாறிருக்க யாழ். குடாநாட்டிலுள்ள விவசாயிகள் வெள்ளம் மற்றும் நோய்கள் என்பவற்றின் தாக்கத்தால் விவசாய நடவடிக்கை ரீதியாக எப்படியான பாதிப்புக்களை எதிர்கொள்கின்ற போதும் அவர்களுக்கு மானிய உதவிகளோ நஷ்டஈட்டு உதவிகளோ எவராலும் வழங்கப்படுவதில்லை. இதனால் விவசாயிகள் நஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (33)

# சனாதிபதித் தேர்தலை புறக்கணித்து விடுதலைக்கு வலுச்சேர்ப்போம்

## *தீவகம் விழிப்புணர்வுக் கழகம்*

சிறிலங்காவுக்கான சனாதிபதித் தேர்தலை தமிழ் மக்களாகிய நாங்கள் புறக்கணித்து விடுதலைக்கு வலுச்சேர்ப்போம் என தீவகம் விழிப்புணர்வுக் கழகம் கேட்டுள்ளது. அதில் மேலும்,

மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களுக்கு தாயகம் என்று ஒன்றில்லை, சுயநிர்ணய உரிமை கிடையாது, யுத்தநிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்படவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயை புறந்தள்ள வேண்டும் என்று வெளிப்படையாகவே இனவாதத்தை கக்கிவருவதுடன், தான் சிங்கள பௌத்த மக்களின் காவலன் என்றும் கூறிவருகின்றார். அத்துடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கான மறைமுக நிகழ்ச்சி நிரல் ஒன்றையும் கொண்டிருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்கவோ, காலத்தை இழுத்தடித்து சர்வதேச வலைப்பின்னல் ஊடாக தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க முனைந்தவர். இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்யப் பகீரதப் பிரயத்தனம் செய்தவர், தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான அவசர காலச் சட்டத்திற்கு ஒத்துழைத்து பல இளைஞர்கள் கைது செய்யப்படவும், காணாமல் போகவும் காரணமாக இருந்தவர்.

ஆகவே, இந்தத் தேர்தலானது சிறிலங்காவிற்கும் சிங்கள மக்களுக்குமான ஒரு அதிகாரமிக்க தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலாகும். இத்தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்கள் எந்தப்பயனையும் அடையப் போவதில்லை. ஆனால், இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிப்பதன் மூலம் பல நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. தமிழ் மக்களின் அபிலாஷைகளை எந்தவொரு சிங்களத் தலைவரும் நிறைவேற்றமாட்டார்கள் என்பதையும், எள்ளளவும் தமிழ் மக்கள் நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் இதன்மூலம் சர்வதேசத்திற்கு எடுத்துக் கூற முடியும்.

எனவே, தமிழ் மக்கள் அனைவரும் இதற்கு துணைபோகாமல் இந்தத் தேர்தலைப் புறக்கணித்து இனத்தின் விடுதலைக்கு வலுச்சேர்ப்பதே சரியான முடிவாகும் என தீவகம் விழிப்புணர்வுக்கழகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (33)

# தஹநாயக்க வழியில் மகிந்த: முடிவும் அவ்வாறானதா...?

மகிந்த ராஜபக்ஷ தெற்கு இலங்கையில் தோன்றிய முதலாவது பெரும் அரசியல் தலைவர் என தற்போது கூறப்பட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் இவருக்கு முன்பு தெற்குப்பகுதி அதாவது காலி, மாத்தறை அம்பாந்தோட்டைப் பிரதேசங்களில் பெரும் செல்வாக்குடன் இருந்து வந்தவர் விஜயானந்த தஹநாயக்க ஆவார். அவரும் நாட்டின் பிரதமராகப் பதவி வகித்தார். எனவே மகிந்த ராஜபக்ஷ இரண்டாவதாக வந்தவர் எனலாம். தஹநாயக்கவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிட்டு வென்று பிரதமராகப் பதவி வகித்தது போன்று மகிந்த ராஜபக்ஷவும் பிரதமரான போதிலும் இதுவரை சுதந்திரக் கட்சியின் தலைவராக வந்துவிடவில்லை.

அதற்குக் காரணம் தஹநாயக்க சென்ற அரசியல் வழியிலேயே மகிந்த ராஜபக்ஷவும் பயணிப்பதாகும். அந்தப் பயணம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பரம்பரையான பண்டாரநாயக்கக்களை புறந்தள்ளிவிட்டு செல்லும் பயணமாகும். தஹநாயக்க வீழ்ச்சியுற்றது அப்படியான பயணம் மேற்கொண்டதனாலாகும். மகிந்தவுக்கும் அவ்வாறான நிலையே தோன்றும் என்பது தற்போது கூறமுடியாது.

இந்த தஹநாயக்க யார்? அவருக்கு சுதந்திரக் கட்சிக்குள் என்ன நடந்தது? என்பதை சற்று மீட்டுப்பார்ப்பது நல்லது. அத்துடன் அதனை மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் வரலாற்றுடன் ஒப்பிட்டு நோக்க வேண்டும். தஹநாயக்க எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவுக்கும் அவரது



கட்சிக்கும் பலத்த ஆதரவு தெரிவித்து வந்த தென்னிலங்கை அரசியல்வாதியாவார். தற்போது மகிந்த ராஜபக்ஷவைப் போன்று அவர் கட்சியில் மிக ஐக்கியத்துடன் செயற்பட்டார்.

தஹநாயக்கவுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட முன்பு அதற்குப் பொருத்தமானவராக இருந்த பிலிப் குணவர்த்தன கட்சியைவிட்டு விலகினார். சபாநாயகராக இருந்த சி.பி.டி.சில்வா நோய்வாய்ப்பட்டார்.

அதேபோன்று தற்போது மகிந்தவுக்கு முன்பு சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் பிரதமராகும் வாய்ப்பைப் பெற்றிருந்த தர்மசிறி சேனநாயக்க காலமானார். சிரேஷ்ட உறுப்பினராக இருந்த லக்ஷ்மன் ஜெயக்கொடி கட்சியிலிருந்து நீக்கப்பட்டார். அத்துடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளராக இருந்து பிரதமர் பதவிக்கு மோப்பம் பிடித்த எஸ்.பி. திசாநாயக்க கட்சியிலிருந்தும் அரசியலிருந்தும் விலகினார். யாழ்ப்பாணத்தை விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றிய வகையில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் இரண்டாவதாக பிரபலமடைந்த அநுருத்த ரத்வத்தவும் கொலைச் சம்பவத்தோடு தொடர்புபட்ட வழக்கு விசாரணையையடுத்து அரசியலில் இருந்து நீக்கப்பட்டார். பொதுசன ஐக்கிய முன்னணியரசில் பிரதமர் பதவி வகித்த ரத்னசிறிவிக்கிரம நாயக்கவின் பெயர் 2004 பொதுத்தேர்தலில் தேசிய பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு அவர் பிரதமராகும் வாய்ப்பு பறிக்கப்பட்டது.

ஆனால் தஹநாயக்கவுக்கு வலதுசாரிகள் பக்கமோ இடதுசாரிகள் பக்கமோ சாராமல் கட்சியைப் பாதுகாக்கும் சரியான தேசியவாதியாக இனம்கண்டு பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

அது தொடர்பாக பண்டாரநாயக்கர்களின் வரலாறு என்ற நூலில் கென்றி அபே விக்ரம பின்வருமாறு கூறியுள்ளார். அதாவது "பண்டாரநாயக்கவின் மறைவுக்குப் பின் முதுமையான அரசியல்வாதி என்ற வகையிலும் சம்பிரதாயப்படியும் சி.பி.டி சில்வா பிரதமர் பதவிக்கு பொருத்தமானவராவார். எனினும் துரதிர்ஷ்டவசமாக அவர் நோய்வாய்ப்பட்டு இங்கிலாந்தில் சிகிச்சை பெற்று வருகிறார். எனினும் இதற்குப் பொருத்தமான வேறு ஒருவர் எனில் அது இலங்கரத்னாவாக இருக்கலாம். எனினும் அவர் இடதுசாரிகளின் தொடர்பு வைத்திருப்பதால் சில அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்'' என அந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக சந்திரிகா நியமித்தமையானது அவர் கட்சியைப் பாதுகாப்பதுடன் தன்னையும் கட்சியையும் அழிக்கவரும் ஜே.வி.பி யினரை ஒழிப்பதற்காகும். ஒரு மரத்தை விழுத்த இன்னொரு மரத்தை உபயோகிப்பதுபோல தெற்கிலங்கை அரசியல்வாதி மூலமே தெற்கிலங்கையின் மற்றொரு அரசியல்வாதியை ஒழிக்க சந்திரிகா திட்டமிட்டார். அத்துடன் ஜே.வி.பியின் தாளத்துக்கேற்ப கதிர்காமர் செயற்படுவார் எனக் கருதியே ஜே.வி.பி யினர் கதிர்காமரைப் பிரதமராக பிரேரித்ததை சந்திரிகா நிராகரித்தார். மட்டுமன்றி 2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கட்சியிழந்த செல்வாக்கை மகிந்த மீட்டுத் தருவார் என்றும் சந்திரிகா கருதினார்.

அன்று தஹநாயக்க பிரதமராக பதவியேற்ற நாள்முதல் பண்டாரநாயக்க குடும்பத்தை அவர் சந்தேகத்துடனேயே அவதானித்து வந்தார். பண்டாரநாயக்க கொலையுண்ட பின்னர் அவரது குடும்பத்தினருக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அதிகாரம் இருக்கிறதா என்ற சந்தேகமே அதுவாகும் இதனால் தான் பிரிந்து சென்று இன்னும் ஒரு அணியை உருவாக்க அவர் திட்டமிட்டார்.

அதனை அவர் அன்று அலரிமாளிகையில் அமைச்சர்கள் முன்னிலையில் உரையாற்றும் போது பின்வருமாறு தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகள் சிதறடிக்கப்படுகின்றன. நாம் வேறு ஒரு அணியை உருவாக்கப்போகிறோம். விரும்பியவர்கள் அதில் இணைந்து கொள்ளலாம். இதனை ஏற்க மறுத்த சில உறுப்பினர்கள் கூட்டத்திலிருந்து வெளியேறினர். அதனால் அப்போதைய ஆளுனரான பிலிப் குணவர்த்தன வால் ஐந்து உறுப்பினர்கள் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். அத்துடன் சில அமைச்சர்களின் பதவி குறைக்கப்பட்டது. எனவே. தஹநாயக்க கட்சியைப் பாதுகாத்து ஒற்றுமையுடன் நாட்டை ஆட்சி செய்வார் எனக் கருதி பிரதமர் பதவியை வழங்கியவேளை சிலகாலம் செல்ல அவர் தனது சொந்த அரசியல் இலாபம் கருதியும் அதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இருந்ததுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஓரம் கட்ட நினைத்தார்.

அத்துடன் வெவ்வேறு கட்சிகளில் தனக்கு விசுவாசமான ஒருசிலரை இணைத்துக்கொண்டு பாராளுமன்றைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுத்தார்.

அப்போது அவர் இலங்கை சனநாயகக் கட்சி என்ற புதிய கட்சியை ஏற்படுத்தி அதன் சார்பில் போட்டியிட்டார்.

எனினும் அன்றைய தேர்தலில் அவர் படுதோல்வியைச் சந்தித்ததுடன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். 1965 ஆம் ஆண்டிலும் 1977 ஆம் ஆண்டிலும் அவர் அக்கட்சி சார்பில் போட்டியிட்டார். அத்துடன் அவரது அரசியல் வாழ்வு முற்றுப்பெற்றது.

அதேபோன்ற நிலை மகிந்தவுக்கும் வரவேண்டும் என்றோ, வரும் என்றோ கூறுவதற்கில்லை. ஆயினும் பிரதமர் பதவி கிடைத்த பின்னரும் சனாதிபதி வேட்பாளராக நியமனம் கிடைத்த பின்னரும் மகிந்த தஹநாயக்கவின் வழியையே பின்பற்றுவதாகவே தெரிகிறது.

காரணம் பிரதமரான பின்னர் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் பண்டாரநாயக்க குடும்பத்தினரையும் மறந்துவிட்டமையாகும். அத்துடன் கட்சி மீது அவரும் தஹநாயக்கவைப் போன்று சந்தேகம் கொள்ளத் தலைப்பட்டார். சந்திரிகாவும் கட்சியும், தனக்கு சனாதிபதி வேட்பாளர் தகுதியை வழங்கிய பின்னரும் கூட அவர் தனது சந்தேகத்தைக் கைவிடவில்லை. அத்துடன் அரசுடன் முரண்பட்டுக் கொண்டு வீதியில் இறங்கி சந்திரிகாவையும் கட்சியையும் விமர்சனம் செய்து அவர்களை அழிக்க சபதம் எடுத்துள்ள ஜே.வி.பி யினருடன் புதிதாக ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டுள்ளார். ஜே.வி.பி யும் ஹெல உறுமயவும் தன்னைப் பாதுகாக்கும் என்று கருதியிருக்கின்றார். அவ்வாறு கருதி கட்சியையும் பண்டாரநாயக்க குடும்பத்தினரையும் ஓரம் கட்டியிருக்கிறார்.

புதிதாக செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவையும் உடன்பாட்டையும் பெறத் தவறியிருக்கிறார். அவர் தற்போது வெளியிட்டுள்ள "மகிந்த சிந்தனை'' என்ற தேர்தல் விஞ்ஞாபனமும் கட்சியால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. உண்மையில் அவரின் தேர்தல் நடவடிக்கைகளும் தீர்மானங்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் அல்ல. அனைத்தையும் அவரது சகோதரரான பசில் ராஜபக்ஷவும் மங்கள சமரவீரவும் விமல் வீரவன்சவுமே முன்னெடுத்துச் செல்கின்றனர்.

பசில் ராஜபக்ஷ என்பவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ மகிந்த ராஜபக்ஷவோ தென் பகுதிக்கு சேவையாற்றவில்லை

**உப்புல் ஜோசப் பர்னாந்து (லங்காதீப) தமிழில் வடிவேல்**

எனக் கூறி 1982 ஆம் ஆண்டு ஐ.தே.கட்சியில் இணைந்தவராவார். சந்திரிகாவின் கூற்றுப்படி மங்கள சமரவீர என்பவர் ஜே.வி.பி மூலமாக சுதந்திரக்கட்சியை அழிக்கும் ஒப்பந்தக்காரராவார்.

இந்த வகையிலானவர்களுடன் இணைந்து மகிந்த ராஜபக்ஷ அரசியல் நடத்த நினைப்பது 1960 ஆம் ஆண்டு தஹநாயக்க நினைத்ததற்கு மாறானதல்ல. மகிந்த சனாதிபதித்தேர்தலில் வெற்றிபெற்றால் அது அவரின் நல் அதிர்ஷ்டமாகும். இல்லையேல் 1960 ஆம் ஆண்டு தஹநாயக்க தோற்ற பின்பு சுதந்திரக்கட்சி தலைதூக்கியது போன்று நிகழும். அவ்வாறாயின் மகிந்தவின் அரசியல் வாழ்வும் அஸ்தமனமாகும்.






# 03.11.2005
# 09.11.2005

**03**

☐ வியட்நாமில் கடும் சூறாவளி வீசியதில் 18 பேர் பலி, 10பேர் காணாமல் போயினர். பல பொருட்களும் சேதம்.

☐ எதியோப்பிய தலைநகரான அடிஸ் அபாபாவில் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக் காரர்களுக்குமிடையில் கடும் மோதல் ஏற்பட்டது. இதில் இரு ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டுக்கொலை.

**04**

☐ அமெரிக்கக் கண்டத்திலுள்ள நாடுகளின் சனாதிபதிகள் மாநாடு ஆர்ஜென்டீனாவில் ஆரம்பம்.

☐ பாகிஸ்தானின் இண்டஸ் நதியில் சென்றுகொண்டிருந்த படகு அதிக பளு காரணமாக கவிழ்ந்ததில் 75 பேர் நீரில் மூழ்கிப் பலி.

☐ இந்தோனேஷிய தீவான சுமத்திராவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.4 புள்ளியாகப் பதிவானது.

**05**

☐ மத்திய நீர்வளத்துறை இணை அமைச்சர் ஜெய்பிகாஷ்நாராயன் பதவியை இராஜினாமாச் செய்தார்.

☐ தென் பங்களாதேஷில் பேருந்து ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் பலி.

**06**

☐ சோமாலியாப் பிரதமர் மீது எதிர்ப்பாளர்கள் நடத்திய தாக்குதலில் பிரதமரின் பாதுகாவலர்கள் மூவர் பலி.

☐ பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீரிலும் பூகம்ப அதிர்வு ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் ஆறு புள்ளியாகப் பதிவானது.


☐ சீனாவில் சங்காய் கிராமத்தில் உள்ள ஜிப்சம் சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 27 பேர் பலி; 21 பேர் காயம்.

☐ தமிழகம் சென்னை மாநகரில் கடந்த இருவாரங்களாக இடைவிடாது பெய்த பலத்த மழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரண்டாயிரம் ரூபா நிவாரணம் வழங்க தமிழக அரசு அறிவித்ததையடுத்து நிவாரணப் பொருட்களைப் பெற ஒன்று கூடிய மக்களின் நெரிசலில் சிக்கி ஆறு பெண்கள் பரிதாபகரமாகப் பலியானார்கள்.



**07**

☐ அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தில் உள்ள பெம்பி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த உலகிலேயே மிகப் பெரிய தனியார் மருத்துவமனை உடைக்கப்பட்டு அந்த இடத்தில் ஆராய்ச்சிமையத்துடன் கூடிய புதிய கட்டடம் ஒன்று இதைவிட பிரமாண்டமாகக் கட்டியெழுப்பப்படவுள்ளது.



☐ அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தை மீண்டும் சூறாவளி தாக்கியதில் 24 பேர் பலி, 1000 வீடுகள் தரைமட்டம்.



☐ டில்லியில் கடந்த மாதம் 29 ஆம் திகதி நடந்த தொடர்குண்டு வெடிப்பு விசாரணையில் பங்களாதேஷைச் சேர்ந்த நபர் ஒருவர் பொலிசாரால் கைது.

☐ பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக இந்தியாவும், பாகிஸ்தானும் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுப் பகுதியிலுள்ள ஐந்து இடங்களை நிவாரணப் பொருட்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்காக திறக்க ஒப்புக்கொண்டதையடுத்து போக்குவரத்துக்கு பாதை திறக்கப்பட்டது. இதன்போது இந்திய அதிகாரி ஏ.கே. பக்ஷியும் பாகிஸ்தானிய இராணுவ அதிகாரி தகிர்நக்வியும் எல்லைக் கோட்டுக்கருகே சந்தித்து கைகுலுக்கினர்.



☐ ஏராளமான பாகிஸ்தனியர்கள் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டருகே குவிந்து இந்தியப்பகுதிக்குள் நுழைய கோஷங்கள் எழுப்பியபடி வந்த கும்பலைக்கலைக்க பொலிசார் தடியடி, கண்ணீர்ப்புகைக் குண்டுவீச்சு போன்றவற்றை மேற்கொண்டனர்.



☐ பங்களாதேஷில் 120 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்த படகு நீரில் மூழ்கி விபத்துக்குள்ளாகியதில் 25 பேர் காணாமல் போயுள்ளனர்.

☐ பறவைக்காய்ச்சலை எதிர்த்துப்போராடுவது குறித்த மிகப்பெரிய மாநாடு சுவிற்சர்லாந்தில் ஆரம்பம்.

☐ தென் அமெரிக்க நாடான பெருவின் முன்னாள் அதிபர் பியூஜிமோரி சிலி நாட்டில் கைது.

☐ இந்திய அமெரிக்க நாடுகளின் விமானப் படைகள் இணைந்து பெரும்போர் ஒத்திகைகள் மற்றும் கூட்டுப்பயிற்சி நடவடிக்கைகளை இந்தியாவில் ஆரம்பித்தன. இதன் போது அமெரிக்கப்படைகள் இந்தியாவில் பயிற்சி மேற்கொள்வதைக் கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

**08**

☐ பிரான்சின் பரிஸ் நகரில் தொடர்ந்து கலவரம் இடம்பெற்று வந்த நகருக்குள் நுழைய பயணிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை ஏற்பட்ட கலவரங்களில் 3000 வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன.



☐ அவுஸ்திரேலிய பொலிசார் சிட்னியிலும் மெல்பேர்னிலும் திடீர் தேடுதல் வேட்டை நடத்தினர். இதன் போது 17 தீவிரவாத சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். குண்டு தயாரிப்புக்கான பொருட்களும் மீட்கப்பட்டன.

**09**

☐ ஈராக்கின் தலைநகர் வடகிழக்கு பாக்தாத்தில் ஷியாஷொப் மாவட்டத்திலுள்ள மசூதியொன்றுக்கருகிலும், பொலிஸ் நிலையமொன்றுக்கருகிலும் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 1[illegible] பேர் பலி, 34 பேர் படுகாயம்.

☐ ஜோர்தானின் தலைநகரான அம்மானிலுள்ள கிராண்ட்ஹயாட், ரெடிஸன், டேஸ் இன் ஆகிய ஹோட்டல்களில் குண்டுகள் வெடித்ததில் 57 பேர் பலி, 300 இற்கும் மேற்பட்டோர் காயம்.

# பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை; சார்க் மாநாட்டை பயன்படுத்த வேண்டும்

*–சிறிலங்கா வெளி விவகார அமைச்சர் அநுரா*

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதற்கு 13 ஆவது சார்க் மாநாட்டை ஒரு தளமாக உபயோகிக்க வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க வலியுறுத்தியுள்ளார். பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து உரையாடிவிட்டு ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றும் பொழுது இந்தத் தகவலை வெளியிட்டார்.

சார்க் அமைப்பில் உள்ள சகல நாடுகளும், பயங்கரவாதப் பிரச்சினையை எதிர்நோக்குவதனால் ஒருங்கிணைந்த நிலையில் சகல நாடுகளும் இதனை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் பரஸ்பரம் நாடுகளுக்கிடையேயான இரு தரப்பு விடயங்கள் குறித்து ஆராய்ந்ததாகவும் செயலிழந்த நிலையில் உள்ள 1993ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட பொருளாதார ஆணையகத்திற்கு, மீண்டும் புத்துயிர் வழங்கப்படவேண்டும் என பேச்சுவார்த்தையின் பொழுது வலியுறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

# எந்த சனாதிபதி வந்தாலும் நிரந்தரத் தீர்வை தரப்போவதில்லை

**-திருமலை தமிழர் தேசிய வி.வி.அமைப்பு**

(திருகோணமலை)

எமக்குரிய தீர்வை, நாம் விரும்பும் தீர்வை, எமது தியாகம் மிக்க போராட்டத்திற்குரிய தீர்வை, எம் அர்ப்பணிப்பிற்குரிய தீர்வை, நிரந்தர சமாதானத்திற்குரிய தீர்வை எந்த சனாதிபதி வந்தாலும் தரப்போவதில்லை என்பதே உண்மை" என்று திருகோணமலை தமிழ்தேசிய விடுதலை விழிப்புணர்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

எம்தேசத்தை [illegible]மே ஆள்வோம் எமக்குரிய தீர்[illegible]மே பெற்றுக் கொள்ளவேண்[illegible]தலால் சிறிலங்கா தேசம் ஒன்றாக இருக்க வேண்டுமா?, இரண்டாக வேண்டுமா?, சண்டை வேண்டுமா?, சமாதானம் வேண்டுமா?, போர்நிறுத்தம் தொடர வேண்டுமா?, வேண்டாமா? இவற்றை சிறிலங்காவின் மக்கள் தீர்மானிக்கட்டும். எந்த வேட்பாளர் வெற்றிபெற்றால் நல்லது என்பதனையும் அவர்[illegible] தீர்மானிக்கட்டும். ஆனால் யார் வந்தாலும் எமக்குரிய தீர்வை நாம் போராடித்தான் பெறவேண்டும் என்பதை மறக்காதீர்கள் என்றும் அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கட்டட நிர்மாணப் பணிகளுக்கு கடலிலிருந்து மணல்

(திருகோணமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கட்டட நிர்மாண வேலைகளுக்குத் தேவையான ஆற்று மணலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக கடலிலிருந்து மணலைப் பெற்றுக் கொள்ளும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதென வடக்கு கிழக்கு மாகாணசபை தீர்மானித்துள்ளது.

இத் திட்டம் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வெளிநாட்டுத் தொழில் நுட்ப உதவிகளைப் பெற்று செயற்படுத்தப்படும் என்றும் இது தொடர்பாக சர்வதேச ரீதியில் கேள்விப் பத்திரங்கள் கோரப்படவிருப்பதாகவும், வடக்கு கிழக்கு மாகாண சபையின் பொறியியல் சேவைகள் அமைச்சின் பிரதி பிரதம செயலாளர் ரி. தவசிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு கட்டட நிர்மாணப் பணிகளுக்காக இச் செயற்திட்டத்தின் கீழ் ஆறு மில்லியன் மீற்றர் கியூப் கடல் மணல் சேகரிக்கப்பட மதிப்பிடப்பட்டுள்ளது. கடலிலிருந்து பம்பு மூலம் மணல் கரைக்கு கொண்டு வரப்பட்டு பின்னர் நன்னீரில் அது கழுவப்பட்டு உலர்க்கப்படும். அதன் பின்னர் அவ்வாறு சேகரிக்கப்படும் கடல் மணல், கட்டட நிர்மாணங்களிற்குப் பயன்படுத்தப்படும் என்றும் மாகாண பிரதி பிரதம செயலாளர் தவசிலிங்கம் தெரிவித்தார்.

தற்போது கடலிலிருந்து மணலை சேகரித்து கட்டட நிர்மாணங்களிற்குப் பயன்படுத்தப்படும் செயற் திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்துவதாகத் தெரியவில்லை என்று கூறப்படுகின்றது. முதல் தடவையாக வடக்கு கிழக்கு மாகாண சபைதான் இம் முயற்சியில் ஈடுபடுவதற்கு முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (25)

# மிலிந்த மொறகொட உயிருக்கு அச்சுறுத்தல்

*–மகிந்த ராஜபக்ஷ*

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் மிலிந்த மொறகொட எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் மகிந்த கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய பாதுகாப்புச் சபையினருடன் அண்மையில் மிலிந்த மொறகொட ஆலோசனை நடத்தினார். அவரது பாதுகாப்பு இருமடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ.மற்றும் இந்திய புலனாய்வு அமைப்பான றோ ஆகியவற்றின் உளவாளியாக மிலிந்த மொறகொட செயற்படுவதாகக் கூறி அவரது உயிருக்கு குறிவைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்கா புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அறிவித்தல்

## சனாதிபதித்தேர்தல் 17.11.2005
## மாற்றப்பட்ட வாக்களிப்பு நிலையங்கள்
## தேர்தல் மாவட்ட இல:-11 வன்னி

மேற்படி தேர்தலின் போது இராணுவ கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளர் வாக்களிப்பதற்கு வசதியாக இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கீழ்க்காட்டப்பட்டுள்ள இடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

### வாக்கெடுப்புப் பிரிவு "அ" மன்னார்

| வாக்கெடுப்பு மாவட்ட இல | தற்பொழுதுள்ள வாக்களிப்பு நிலையம் | மாற்றப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையம் |
|---|---|---|
| 53 | மன்-பெரியகுஞ்சுக்குளம் றோ.க.த.க. பாடசாலை மடு கோவில் | தற்காலிக கொட்டகை இல-01 புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் மடு வீதி |
| 54 | மன்-பெரியபண்டிவிரிச்சான் அ.த.க.பாடசாலை மடு கோவில் | தற்காலிக கொட்டகை இல-02 புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் மடு வீதி |
| 55 | மன்-தட்சிணாமருதமடு அ.த.க. பாடசாலை மடு கோவில் | தற்காலிககொட்டகை இல-03 புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் மடு வீதி. |
| 56 | மன்-வெள்ளாங்குளம் அ.த.க.பாடசாலை வெள்ளாங்குளம் | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல-01 |
| 57 | மன்- இலுப்பைக்கடவை அ.த.க. பாடசாலை இலுப்பைக்கடவை. | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல -02 |
| 58 | மன்- ஆத்திமோட்டை அ.த.க. பாடசாலை, ஆத்திமோட்டை. | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல -03 |
| 59 | மன்-கோவில்குளம் அ.த.க. பாடசாலை விடத்தல்தீவு. | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை .மண்டப இல -04 |
| 60 | மன்- அலிகார் மகா வித்தியாலயம் விடத்தல்தீவு. | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை .மண்டப இல -05 |
| 61 | மன்-தூயயோசப் வாஸ் மகா வித்தியாலயம் விடத்தல்தீவு | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல -06 |
| 62 | மன்-பெரியமடுமகாவித்தியாலயம் பெரியமடு. | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை.மண்டப இல -07 |
| 63 | மன்-பாப்பாமோட்டை றோ.க.த.க.பாடசாலை திருக்கேதீஸ்வரம். | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல -08 |
| 64 | மன்-பாலைக்குழி றோ.க.த.க. பாடசாலை அடம்பன் | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல -09 |
| 65 | மன்- அடம்பன் மத்திய மகா வித்தியர்லயம் அடம்பன் | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல -10 |
| 66 | மன்- ஆண்டான்குளம் றோ.க.த.க. பாடசாலை ஆண்டான்குளம். | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல -11 |
| 67 | மன்-வட்டக்கண்டல் அ.த.க.பாடசர்லை வட்டக்கண்டல். | மன்-உயிலங்குளம் றோ.க.த.க.பாடசாலை மண்டப இல -12 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு "ஆ" வவுனியா** | |
| | தற்பொழுதுள்ள வாக்களிப்பு நிலையம் | மாற்றப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையம் |
| 1 | பிரதேசசபை காரியாலயம் நெடுங்கேணி. | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 01 |
| 2 | வ-நெடுங்கேணி மகா வித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 02 |
| 3 | வ-குளவிசுட்டான் அ.த.க. பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 03 |
| 4 | வ-நெடுங்கேணி மருதோடை அ.த.க.பாடசாலை. | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 04 |
| 5 | வ-கற்குளம் அ.த.க. பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 05 |
| 9 | வ-சின்னப்பூவரசங்குளம் அ.த.க. பாடசாலை. | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 06 |
| 10 | வ-சின்னடம்பன் பாரதி அ.த.க. பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 07 |
| 11 | வ- புளியங்குளம் இந்துக்கல்லூரி | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 08 |
| 12 | வ- கனகராயன்குளம் மகாவித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 09 |
| 61 | வ-பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 11 |
| 62 | வ-சேமமடு அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 12 |
| 63 | வ-மாதர்பணிக்கர்மகிழங்குளம் அ.த.க. பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 13 |
| 84 | வ-பெரியதம்பனை அ.த.க. பாடசாலை | .மடுவீதி புனித அந்தோனியார் ஆலய அருகாமையில் தற்காலிக கொட்டகை இல -04 |
| | **வாக்கெடுப்புப் பிரிவு "இ" முல்லைத்தீவு** | |
| | தற்பொழுதுள்ள வாக்களிப்பு நிலையம் | மாற்றப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையம் |
| 1 | மு-அம்பாள்புரம் அ.த.க. பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 14 |
| 2 | மு-வவுனிக்குளம் பிரிவு 2 அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 15 |
| 3 | மு-பாண்டியன்குளம் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 16 |
| 4 | மு-நட்டான்கண்டல் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 17 |
| 5 | மு-விநாயகபுரம் அ.த.க.பாடசாலை. | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 18 |
| 6 | மு-துணுக்காய் அ.த.க.பாடசாலை மண்டப இல-01 | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 19 |
| 7 | மு-உயிலங்குளம் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 21 |
| 8 | மு- மல்லாவி மகாவித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 22 |
| 9 | மு-யோகபுரம் மகாவித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 23 |
| 10 | மு-அம்பலப்பெருமாள்குளம் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 24 |
| 11 | மு-புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 25 |
| 12 | மு-புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் மண்ட இல-01 | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 26 |
| 13 | மு-இரணைப்பாலை அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 28 |
| 14 | மு-புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 29 |
| 15 | மு-வள்ளிபுனம் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 30 |
| 16 | மு-உடையார்கட்டு அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 31 |
| 17 | மு- விசுவமடு அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 32 |
| 18 | மு-வள்ளுவர்புரம் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 33 |
| 19 | மு-முத்துஐயன்கட்டு குளம் இடதுகரை அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 34 |

(9ஆம் பக்கம் பார்க்க)

| | | |
|---|---|---|
| 20 | மு-கற்சிலைமடு அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 35 |
| 21 | மு- ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 36 |
| 22 | மு-சின்னத்தம்பி இந்து த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 37 |
| 23 | மு-கரிபட்டமுறிப்பு அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 38 |
| 24 | மு-ஒலுமடு அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 39 |
| 25 | மு-மாங்குளம் மகாவித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 40 |
| 26 | மு-திருமுறிகண்டி அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 41 |
| 27 | மு-ஒதியமலை அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 42 |
| 28 | மு-தண்டுவான் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 43 |
| 29 | மு-கொக்குளாய் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 44 |
| 30 | மு-கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை. | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 45 |
| 32 | மு-செம்மலை மகாவித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 46 |
| 33 | மு-அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 47 |
| 34 | மு-சிலாவத்தை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 48 |
| 35 | மு-கள்ளப்பாடுஅ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 49 |
| 36 | மு-முல்லைத்தீவு இந்து போட் த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 50 |
| 37 | மு-முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 51 |
| 38 | மு-முல்லைத்தீவு மகாவித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 52 |
| 39 | மு-வெள்ளாமுள்ளிவாய்க்கால் அ.த.க. பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 53 |
| 40 | மு-வட்டுவாகல் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 54 |
| 41 | மு-கரையாமுள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 55 |
| 42 | மு-அம்பலவன் பொக்கணை அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 56 |
| 43 | மு-வற்றாப்பளை றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 57 |
| 44 | மு- முள்ளியவளை அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 58 |
| 45 | மு.வித்தியானந்தா கல்லூரி முள்ளியவளை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 59 |
| 46 | மாமூலை கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 60 |
| 47 | மு-தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 61 |
| 48 | மு-கனுக்கேணி கிராம அபிவிருத்தி சங்க மண்டபம் | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 62 |
| 49 | மு-தண்ணீரூற்று இந்து போட் அ.த.க.பாடசாலை | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 63 |
| 50. | மு-குமுழமுனை மகாவித்தியாலயம். | வ- ஓமந்தை மகாவித்தியாலய வளாகம் மண்டப இல - 64 |

**சி.சண்முகம்**
**தெரிவத்தாட்சி அலுவலர்**
**தே.மா. இல: 11 வன்னி**

(சி-13323)

# சனாதிபதித் தேர்தல்–2005
## வாக்காளர்களுக்கான அறிவித்தல்

01. 2005.11.17 ஆம் திகதி மு.ப 7.00 மணிக்கு வாக்கெடுப்பு ஆரம்பமாவதால் வாக்காளர்கள் நேர காலத்துடன் குறித்த வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்று வாக்களிக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்.
02. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை வாக்களிப்பு நிலைய அலுவலர்களிடம் ஒப்படைக்கவும்.
03. அஞ்சல் மூலம் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று கிடைக்காவிடினும், தமது பெயர் தேருநர் இடாப்பில் பதியப்பட்டிருப்பின், தனது அடையாளம் மற்றும் வதிவிடம் தொடர்பான தகவல்களை வாக்களிப்பு நிலைய அலுவலர்களிடம் முன்வைப்பதனூடாக அவ்வாறான வாக்காளர்களுக்கு இடையூறுகளேதுமின்றி வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
04. மேற்குறித்த வாக்கெடுப்புக்காகப் பயன்படுத்தப்படும் 2004 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் மரணித்துள்ள, வெளிநாடு சென்றுள்ள வாக்காளர்கள் தொடர்பான விபரங்கள் 2005 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்களின் தயாரிப்புக்காக கிராம அலுவலர்கள், ஏனைய விசேட கணக்கெடுப்பு அலுவலர்களினூடாக மாவட்ட பதிவு செய்யும் அலுவலர்களால் (மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்) பெறப்பட்டுள்ளன.
05. அத்தகைய நபர்கள் தொடர்பான விபரங்கள் 2005.11.17 ஆம் திகதி வாக்கெடுப்பு நிலையங்களின் சேவையிலீடுபடவுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அவருக்குரிய ஒரு பெயருக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை (Poll card) எடுத்துக்கொண்டு வந்து எவரேனுமொருவர் வாக்கெடுப்பு நிலையத்தில் சமர்ப்பித்து வாக்குச் சீட்டையொன்றைக் கோருவாராயின் அவருடைய அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு என்னால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
06. வாக்களிப்பு நிலையத்தில் வைத்து சிலநேரம் தங்களது ஆளடையாளம் பற்றி சந்தேகமெழ வாய்ப்புண்டு மேலும், தங்களது ஆளடையாளம் பற்றிய தகவல்கள் வாக்களிப்பு நிலைய சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கும் வாக்கெடுப்பு நிலைய அலுவலர் குழாத்திற்கும் தேவைப்படலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையையோ கடவுச்சீட்டையோ, சாரதி அனுமதிப்பத்திரத்தையோ, ஓய்வூதிய அடையாள அட்டையையோ அல்லது புகைப்படமொன்றுடனான உத்தியோகபூர்வ ஆளடையாள அட்டையொன்றையோ வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லும்போது எடுத்துச் செல்வது தங்களுக்கு பயனுள்ளதாகவிருக்கும்.
07. ஒவ்வொரு வேட்பாளரினதும் பெயருக்கு முன்னால் அவ்வேட்பாளருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள சின்னமும், வாக்காளருக்கு தமது வாக்கையும் விருப்பையும் அடையாளமிடுவதற்கான வெற்றிடமொன்றும் வாக்குச் சீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன.
08. இத்தேர்தலில் வேட்பாளர்கள் மூவருக்கு மேற்பட்ட தொகையினர் இருப்பதனால் வாக்கையும் தாம் விரும்பியவாறு இரண்டாம் மூன்றாம் விருப்புக்களையும் அடையாளமிட அவகாசமுண்டு வாக்காளர் தாம் விரும்பிய வேட்பாளர் ஒருவருக்கு "1" என்ற இலக்கத்தை எழுதுவதன் மூலம் வாக்கினை அடையாளமிட முடியும். அதேபோல ஏனைய வேட்பாளர்கள் இருவருக்கும் "2" "3" என்ற இலக்கங்களை அடையாளமிட்டு தமது விருப்பங்களை வெளிப்படுத்த முடியும்.
09. வேட்பாளருக்கு வாக்கு அடையாளமிடப்பட்டு இருப்பினும் வாக்குச்சீட்டுகள் வேட்பாளருக்கான விருப்புத் தெரிவித்தல்கள் குறிக்கப்படாதிருப்பின் அவ்வாறான வாக்குச்சீட்டொன்று வாக்கு அடையாளமிடப்பட்டிருக்கும் வேட்பாளர் சார்பாக மாத்திரம் எண்ணப்படும்.
10. வேட்பாளர்கள் சார்பாக வாக்கு அடையாளமிடப்படாது. வேட்பாளர்களுக்கு விருப்புக்கள் அடையாளமிடப்பட்டிருப்பின் வாக்குச் சீட்டுக்கள் வாக்குஎண்ணும்வேளையின்போது செல்லுபடியற்ற வாக்குச்சீட்டுக்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
11. வாக்கினை அடையாளமிட்டதன் பின்னர் விரைவாக வாக்களிப்பு நிலையத்திலிருந்து வெளியேறி வீடுகள் நோக்கிச்செல்லுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தயானந்த திசாநாயக்க
தேர்தல்கள் ஆணையாளர்.

(சி-13331)

# சனாதிபதித்தேர்தல் – 2005
## வாக்காளர்களுக்கான அறிவித்தல்

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் குற்றங்கள் வழக்குத் தொடரப்பட முடிந்த குற்றங்கள் என அறிவிக்கப்படுகின்றன. ஆதலால் அக்குற்றங்களிலிருந்து தவிர்த்துக்கொள்ளுமாறு அனைவரும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

01. உரிய அதிகாரமின்றி ஏதுமொரு வாக்குச் சீட்டொன்றை எவருக்கேனும் வழங்குதல்.
02. வாக்குச் சீட்டு ஒன்றை விற்றல் அல்லது விலை கொடுத்து வாங்குதல்.
03. ஏதேனும் ஒரு வாக்குப்பெட்டிக்குள் இடுவதற்கு சட்டத்தால் தமக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டு தவிர்ந்த வேறேதுமொன்றை அவ்வாக்குப் பெட்டிக்குள் இடல்.
04. முறையான அதிகாரமின்றி வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே ஏதேனும் ஒரு வாக்குச் சீட்டைக் கொண்டு செல்லுதல்.
05. முறையான அதிகாரமின்றி வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே ஏதேனும் ஒரு வாக்குச்சீட்டை தம் உடைமையில் வைத்திருத்தல்.
06. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை (Pollcard) எவரேனும் ஒருவருக்கு முறையான அதிகாரமின்றி வழங்குதல்.
07. வேறொரு வாக்காளருக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை தமது உடைமையில் வைத்திருத்தல்.
08. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றை வேறொருவருக்கு விற்றல், விலை கொடுத்து வாங்குதல்.
09. அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றை வாக்கெடுப்பு நிலையத்தினுள் மற்றவர்களுக்கு தெரியும்படி வேண்டுமென்றே காட்டுதல்.
10. உயிரோடு உள்ள, இறந்த அல்லது கற்பனை ஆளாக வாக்களித்தல்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
ராஜகிரிய.
2005. நவம்பர் மாதம் 08ஆம் திகதி,

தயானந்த திசாநாயக்க,
தேர்தல்கள் ஆணையாளர்.

(சி-13330)

# தென்ஆபிரிக்காவுக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு
## பழைய கூட்டணி தொடர்கிறது- கங்குலிக்கு வாய்ப்பு மறுப்பு



மீண்டும் சவுரவ் கங்குலிக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. தென் ஆபிரிக்காவிற்கு எதிரான இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இலங்கைக்கு எதிராக விளையாடிய அதே கூட்டணி நீடிக்கிறது.

இந்தியா வந்துள்ள தென் ஆபிரிக்க அணி ஐந்து ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கிறது. இத்தொடருக்கான இந்திய அணியை தேர்வு செய்வதற்காகத் தேர்வாளர்கள் வதோதராவில் கூடினர். கங்குலிக்கு வாய்ப்புக்கிடைக்கும் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் வெற்றிக் கூட்டணியில் மாற்றம் செய்ய விரும்பவில்லை எனத் தேர்வுக்குழுத்தலைவர் கிரன்மோரே திட்டவட்டமாகத் தெரிவித்தார். இதையடுத்து அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. ராகுல் ராவிட் தலைவராக நீடிக்கிறார்.

# புதுத் தெம்புடன் சிறிலங்கா அணி டெஸ்ட் போட்டிக்கு இந்தியா வரும்




முதல் சோதனையில் சாதித்து விட்டால், அதற்கு பின் துணிச்சலாக 'ரிஸ்க்' எடுக்கலாம். இதுதான் இந்தியாவின் விடயத்திலும் நடந்தது. நாக்பூர் போட்டியில் மூன்றாவது வீரராக பதான் களமிறக்கப்பட்டார். இவர் வெளுத்து வாங்க, வெற்றி தேடி வந்தது. இதையடுத்து சோதனைமுயற்சிகள் தொடர்ந்தன. ஒருவேளை 'முதல் முயற்சி' தோல்வியில் முடிந்திருந்தால், இந்தியாவின் அதிரடிச் சோதனைகளும் தொடர்ந்திருக்காது என்கிறார் சிறிலங்கா அணியின் பயிற்சியாளர் டொம் மூடி.

இம்முறை இலங்கையின் பந்து வீச்சு சுத்தமாக எடுபடவில்லை. அவர்களை மட்டும் குறை சொல்ல முடியாது. ஏனென்றால் துடுப்பாட்டவீரர்களும் பெரிதாக சாதிக்கவில்லை. இத்தொடரில் இருந்து நிறைய பாடங்கள் கற்றோம். எங்களது பலம், பலவீனங்களை நன்கு தெரிந்து கொண்டோம். இது அடுத்து நடக்கவுள்ள தொடர்களில் சாதிக்க உதவிகரமாக அமையும் அனைத்து வீரர்களுக்கும் வாய்ப்புத்தரும் இந்திய அழகு மிகவும் பிடித்திருக்கிறது. இந்த சுழற்சி முறையை இலங்கை அணியிலும் பின்பற்ற விரும்புகிறேன்.

ஒரு நாள் தொடருக்கும் டெஸ்ட் தொடருக்கும் இடையே நல்ல இடைவெளி கிடைத்துள்ளது. இதனால் வீரர்கள் குடும்பத்துடன் சிறிது நாட்கள் கழிக்கலாம். பின்னர் புதுத் தெம்புடன் டெஸ்ட் போட்டிக்கு இந்தியா திரும்பலாம்.டெஸ்ட் தொடரில் நிறைய புதுமுகங்கள், புதிய திட்டங்களுடன் கலக்க காத்திருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

# மாவீரர் நாளை முன்னிட்டு கரப்பந்தாட்டப் போட்டி

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு ஒட்டுசுட்டான் ஈஸ்வரன் விளையாட்டுக்கழகம் முல்லை மாவட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான மாவீரர் சுற்றுக்கேடயத்திற்கான ஆண், பெண் இருபாலாருக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 18-11-2005 அன்று நடைபெற இருப்பதால் பங்குபற்றவுள்ள ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள அனைத்துக் கழகங்களையும் 17-11-2005 பிற்பகல் ஐந்து மணிக்கு முன் பதிவுகளை கற்சிலைமடு கிராம அலுவலர் பணிமனையில் மேற்கொள்ளுமாறு ஈஸ்வரன் விளையாட்டுக்கழகத்தினர் கேட்டுள்ளனர்.

(05)

# சிநேகபூர்வ கால்பந்துப் போட்டி
## ஆர்ஜன்டீனாவை வீழ்த்தியது இங்கிலாந்து







இங்கிலாந்து- ஆர்ஜன்டீனா அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இங்கிலாந்தில் நடைபெற்ற சினேகபூர்வ கால்பந்துப் போட்டியில் இங்கிலாந்து 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுள்ளது.

இதில் இங்கிலாந்து வீரர் மைக்கல் ஒவன் இரண்டு கோல்களையும் வேயின் றூனி ஒரு கோலையும் போட்டனர்.

ஆர்ஜன்டீனா சார்பில் கென்ன கிரஸ்போ ஒரு கோலையும் கரத் ஒருகோலையும் அடித்தனர் ஆர்ஜன்டீனாவின் கோல்காப்பாளர் திறமையாகச் செயற்பட்டதன் காரணமாக இங்கிலாந்துக்கு இலகுவாக வெற்றியைப் பெற முடியாதிருந்தது.

# இந்திய அணியின் அபார வளர்ச்சி ஆச்சரியப்படுகிறார் — ஸ்மித்



"இந்திய அணி முற்றிலும் மாறிவிட்டது. இளம் வீரர்கள் திறமையாக ஆடுகிறார்கள்.சச்சின் வேறு வந்து விட்டதால் ஆட்டத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது." என ஆச்சரியப்படுகிறார் தென்ஆபிரிக்க தலைவர் கிரேம் ஸ்மித்.

இந்தியா வந்துள்ள தென்ஆபிரிக்க அணி ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகளுமே சமீபத்தில் மகத்தான எழுச்சி கண்டுள்ளன. இந்திய அணி இலங்கையை ஒருவழி பண்ணியது. இதேபோல் தென்ஆபிரிக்க அணி நியூசிலாந்தை 4-0 என்ற கணக்கில் வீழ்த்தியது. தவிர தொடர்ந்து 19 ஒருநாள் போட்டிகளில் வென்று சாதித்துள்ளது. இந்த வெற்றி நடை குறித்து மும்பையில் ஸ்மித் அளித்த பேட்டியில் ;

இலங்கைக்கு எதிராக இந்திய வீரர்கள் சிறப்பாக ஆடினர். இவர்களது வெற்றிநடையைக் கண்டு கவலைப்படவில்லை. ஏனென்றால் நாங்களும் தொடர்ந்து வெற்றி பெற்றுத் தான் வருகிறோம். இந்த வெற்றி இந்திய மண்ணிலும் தொடர வேண்டும் என்பதே விருப்பம். வீரர்கள் தன்னம்பிக்கையுடன் இருப்பதால் நிச்சயமாக சாதிக்க முடியும்.

தற்போதைய இந்திய அணி மீதான எங்களது மதிப்பீடு மாறியுள்ளது. இளம் வீரர்கள் சிறப்பாக ஆடுகிறார்கள். சச்சினும் வந்து விட்டதால் முற்றிலும் மாறுபட்ட அணியாக காட்சி அளிக்கிறது.

சூதாட்ட சர்ச்சை காரணமாக இம்முறை கிப்ஸ், நிக்கி போயே இடம்பெறாதது தான் ஒரே வருத்தம். இவர்களது இடத்தை இளம் வீரர்களைக் கொண்டு சமாளிப்போம் இவ்வாறு ஸ்மித் தெரிவித்தார்.

ராவிட் தெரிவிக்கும்போது "நாங்கள் ஏற்கனவே இலங்கையை எதிர்த்து அபார வெற்றியை பெற்றிருக்கிறோம். எனவே பெரிய அணியாக இருந்தாலும், எவ்வளவு பலம்வாய்ந்த அணியாக இருந்தாலும் அதை வீழ்த்துகிற எங்களுடைய சிறப்பான ஆட்டம் தென்ஆபிரிக்காவுக்கு எதிராகவும் தொடரும்" என்று தெளிவாகக் கூறினார்.

மேலும் ராவிட் பேசும்போது, "தென்ஆபிரிக்கா உலகின் இரண்டாவது இடம் வகிக்கிற அணியாகும். எனவே அவர்களுடன் மோதுவதை ஆர்வத்தோடு எதிர்பார்த்து இருக்கிறோம் என்றார்.

# இளம் வீரர்களின் ஆட்டம் மகிழ்ச்சி அளிக்கிறது





இந்திய அணியில் இளம் வீரர்களின ஆட்டம் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்று பயிற்சியாளர் சப்பல் கூறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இந்தியா இலங்கைக்கு எதிரான தொடரை 6-1 என்ற கணக்கில் வென்றது.

கடைசிப் போட்டி முடிந்ததும் இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் கூறுகையில் "இந்தப்போட்டித் தொடர் தொடங்கும் முன்பு எனக்கு இருந்த எதிர்பார்ப்புக்கு ஏற்ப இளம் வீரர்கள் ஆடினார்கள். வீரர்களின் ஆட்டம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்த நிலை தொடரக் கடினமாக உழைக்க வேண்டும்." என்று கூறினார்.

இந்திய அணித் தலைவர் ராவிட் கூறுகையில்,"அணியின் சிறந்த கூட்டு முயற்சி மற்றும் பங்களிப்பால் இந்த வெற்றி கிடைத்துள்ளது. இவ்வளவு எளிதாக வெற்றி பெறுவோம் என்று நான் நினைக்கவில்லை. அடுத்து தென்ஆபிரிக்காவுக்கு எதிரான தொடரை எதிர்நோக்கி இருக்கிறோம். தென்ஆபிரிக்க அணியை சந்திக்கத் தயார்." என்று தெரிவித்தார்.

இலங்கை அணித் தலைவர் அத்தப்பத்து கூறுகையில், "இந்திய அணி எல்லா விதத்திலும் இலங்கை அணியை வீழ்த்தியுள்ளது. இந்தத் தோல்வியை மறந்துவிட்டு டெஸ்ட்போட்டியில் சிறப்பாக ஆடுவோம்." என்று கூறினார்.




# சிறிலங்காவுக்கு எதிராக 47 ஆவது வெற்றி

பரோடாவில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியின் முடிவில், இலங்கைக்கு எதிராக இந்தியா 47ஆவது வெற்றியைப் பெற்றுள்ளது. இரு அணிகளும் இதுவரை 89 முறை மோதியுள்ளன.

தாயக மண்ணில் நடைபெற்ற 33ஒரு நாள் போட்டிகளில் இலங்கைக்கு எதிராக இந்தியாவுக்குக் கிடைத்துள்ள 23ஆவது வெற்றி இது.

# முல்டான் டெஸ்ட் ரெஸ்கொதிக் சதம்; இங்கிலாந்து அணி ஸ்திர நிலையில்

பாகிஸ்தான்-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் முல்டானில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வலுவான நிலையை பெற்றுள்ளது.

இரண்டாம் நாளான நேற்று ஆறு விக்கெட் இழப்பிற்கு 244 ஓட்டங்களுடன் ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் தனது முதல் இனிங்சில் 274 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சல்மான்பட் 71 ஓட்டங்களையும் இன்சமாம் 53 ஓட்டங்களையும் மலிக் யூனிஸ்கான் தலா 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிளின்டொப் நான்கு விக்கெட்டுக்களையும், ஹார்மிஷன் மூன்று விக்கெட்டுக்களையும் ஹொக்காட் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்சிற்காக துடுப்பாடும் இங்கிலாந்து அணித்தலைவர் ரெஸ்கொதிக்கின் சதத்தின் உதவியுடன் வலுவான நிலையை பெற்றுள்ளது.

நேற்றைய ஆட்ட நேரமுடிவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 253 ஓட்டங்களை பெற்றுள்ளது.

ரெஸ்கொதிக் ஆட்டமிழக்காது 135 ஓட்டங்களை பெற்றுள்ளார் இயன்பெல் 71 ஓட்டங்களையும் ஸ்ரோஸ் ஒன்பது, கொலிங்வூட் பத்து ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் மலிக், சமிஅகமட் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றினர் இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.





## சிந்தனைக்கு



தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்;தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14.11.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## எதுவும் மாறிவிடாது!

சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் தமிழ்மக்கள் வாக்களிப்பது குறித்து சில அரசியல் ஆய்வாளர்கள் வாதப்பிரதிவாதங்களை முன்வைத்து வருகின்றனர். இதில் சிலர், தமிழ் மக்கள் வாக்களிக்காது விட்டாலும், தேர்தலின்போது சில ஆயுதக்குழுக்கள் மேற்கொள்ளும் மோசடிகளினால் தப்பானதொரு தோற்றப்பாடு வெளிப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கின்றனர்.

அதாவது தேர்தலின்போது ஈ.பி.டி.பி.போன்ற குழுக்கள் மேற்கொள்ளக்கூடிய மோசடி நடவடிக்கைகளினால் மகிந்தராஜபக்ஷவிற்குக்கிடைக்கப்போகும் வாக்குகள் தமிழ் மக்கள் ஒற்றையாட்சி முறைக்குள் தீர்வொன்றைக் காண்பதற்கு ஒத்துழைத்ததாக அர்த்தப்படுத்தப்பட்டுவிடும் என கூறிவருகின்றனர். ஆனால் இவ்விவாதமானது அர்த்தமற்றதும், பயனற்றதுமாகும்.

விடுதலைப்புலிகளைப்பொறுத்து இத்தேர்தலில் தமிழ் மக்கள் தமது சிந்தனைக்கும், விருப்பிற்கும் ஏற்ப சுயமானதொரு முடிவினை எடுக்கலாம் எனத் தெளிவாக அறிவித்துள்ளனர். அதாவது தமிழ் மக்கள் தேர்தலில் விரும்பினால் வாக்களிக்கலாம் அல்லது வாக்களிக்காது விடலாம் இது அவர்களின் விருப்பு வெறுப்பின் அடிப்படையிலானது. ஆனால் பல பொதுஅமைப்புக்கள்தேர்தலைத் தமிழ்மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும் எனக் கூறிவருவது வேறுவிடயம்

தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளை வலியுறுத்தும் வகையில், 1977ஆம் ஆண்டு தேர்தலிலிருந்து கடைசியாக 2004இல் நடந்த பொதுத்தேர்தல் வரையில் தெளிவான தீர்மானங்களுடன் வாக்களித்துள்ளார்கள். குறிப்பாக 1977இல் தனிநாடு ஒன்றிற்காக தேர்தலில் வாக்களித்த மக்கள், 2004இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தமது ஏக பிரதிநிதிகள் எனவும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு அங்கீகாரம் அளித்தும் வாக்களித்தனர்.

ஆனால் தற்போதைய சனாதிபதித்தேர்தலில் தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டுடன் வாக்களிப்பதற்கு ஏதுவுமே இல்லை.ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைகளை நிலை நிறுத்தி இனியும் வாக்களிக்க வேண்டிய தேவையில்லை.அத்தோடு, ஐ.தே.கட்சி வேட்பாளரும் சரி, ஐ.ம.சு முன்னணிவேட்பாளர் மகிந்தராஜபக்ஷவும் சரி.தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான நிலைப்பாட்டில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தவும் இல்லை.

மாறாக மகிந்தராஜபக்ஷ தெளிவாக இனவாத சக்திகளுடன் தேர்தல் கூட்டைக்கொண்டவராகவுள்ளார். அவரின் தலைமையில் பௌத்த– சிங்கள தீவிர அடிப்படைவாத சக்திகள் அணி திரண்டுள்ளன. இதேசமயம், ரணில்விக்கிரமசிங்க தரப்பு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடிக்க தாம் நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொண்ட நடவடிக்கை மூலம் சிங்கள மக்களின் வாக்குக்களைப் பெறுவதிலேயே அக்கறை காட்டுகின்றது.

ஆகையினால் தமிழ்மக்களின் உரிமைகள் தொடர்பான சிந்தனைகள் எதிர்பார்க்கைகள் என்பனவற்றுடன் தமிழ்மக்கள் எவருமே இத்தேர்தலில் வாக்களிக்க மாட்டார்கள். ஆனால் சில வேளைகளில் தமிழ் மக்களில் மிகச்சிறிய தொகுதியினர் யாரோ ஒருவருக்குவாக்களித்தல் கூடும்.

ஆனால் இவற்றை வைத்துக்கொண்டு தமிழ் மக்கள் அவரை ஆதரித்து விட்டார்கள் இவரைஆதரித்து விட்டார்கள். எனப் பிரச்சாரப்படுத்திக்கொள்வதோ அன்றி அதனை ஆதரித்து விட்டார்கள் இதனை ஆதரித்துவிட்டார்கள் என முடிவுக்கு வருவதோ அர்த்தமற்ற தொன்றாகும். அத்தோடு அது தவறான முடிவாகவும் இருக்கும்.

அவ்வாறு யாராவது முடிவிற்கு வந்தாலும் அதனை ஆதரித்து யாராவது வாதிட்டாலும் நாம் அவர்களிடம் கேட்கக் கூடிய பல கேள்விகளில் ஒன்று 1977இலும் 2004 இலும் தமிழ் மக்களின் வாக்களிப்புத் தொடர்பாக உங்கள் விளக்கம் என்ன? நிலைப்பாடு என்ன? என்பதே ஆகும். அவற்றிற்கு நீங்கள் கொடுக்கும் முக்கியத்துவம், அங்கீகாரம் என்ன?

ஆகையினால் சிறிலங்கா சனாதிபதித் தேர்தலின்போது தமிழர்தாயகத்தில் இடம்பெறப்போகும் மோசடிகள் மூலமோ அன்றி தமிழ் மக்களின் மிகச் சிறிய தொகுதியினர் அளிக்கும் வாக்குகளைக் கொண்டோ, தமிழ் மக்கள் இவர்களை ஆதரித்தார்கள், அவர்களை ஆதரித்தார்கள் எனக் கூறுவதோ, அதைக் கைவிட்டார்கள், இதைக்கைவிட்டார்கள் எனக்கூறுவதோ விவாதிப்பதோ, அர்த்தமற்றதும், பயனற்றதுமாகும்.

தமிழ்மக்கள் இனப்பிரச்சினை குறித்து தெளிவானதும் உறுதியானதுமான முடிவுகளை ஏற்கனவே தெரிவித்துவிட்டனர். இதன்பிரகாரம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழர்தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பனவற்றின் அடிப்படையிலே காணப்படக் கூடியது என்பதும், தமிழ் மக்களின் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் என்பதும், விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதி நிதிகள் என்பது உறுதிசெய்யப்பட்டவையாகும்.

ஆகையினால் இனப்பிரச்சினையின் தீர்வு என்பது எவ்வாறு அமைய வேண்டும்? யாருடன் மேற்கொள்ளப்படவேண்டும்? என்பவை எல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டவையாகும். இதில் தமிழ் மக்களின் போராடும் சக்தியும், பெரும்பான்மை தமிழ்மக்களும் புறக்கணிக்கும் தேர்தல் ஒன்றின் முடிவால் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தி வி[illegible]டியும்?

# தாயகத்தின் கிழக்கு பிரதேச மக்களும் தேர்தலில் அக்கறை செலுத்தவில்லை

### -கூட்டமைப்பு பா.உ. தம்பையா கனகசபை

(மட்டக்களப்பு)

தமிழர் தாயகத்தின் கிழக்குப் பிரதேசங்களிலும் சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் குறித்து தமிழ் மக்கள் எதுவித அக்கறையும் செலுத்தவில்லை என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தம்பையா கனகசபை தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவோ, ரணில் விக்கிரமசிங்கவோ யார் வெற்றி பெற்றாலும் தமிழ்மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதில்லை என்பதை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார்கள்.

இந்தத் தேர்தலில் கிழக்குப் பிரதேசத்திலும் தமிழ் மக்கள் எதுவித ஆர்வமும் காட்டவில்லை. இரண்டு கட்சியினருமே ஒரே மாதிரியானவர்கள் என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

இரு பிரதான கட்சிகள் கூட இந்தப்பிரதேசத்தில் பாரிய அளவில் பிரச்சார முன்னெடுப்புகளை மேற்கொள்ளவில்லை. அவர்கள் முஸ்லிம் பிரதேசங்களில் தான் பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.

இந்த இரு கட்சி வேட்பாளர்களுமே தமிழ்மக்களுக்கு எதுவுமே கொடுக்கமுடியாதவர்களாகவும், கொடுக்கக்கூடாது என்பவர்களாகவும் இருக்கிறார்கள். இருவரது தொடர்பில் எமக்கு எதுவித வித்தியாசமும் தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் விடுதலைப்புலிகளுக்கு எதிரானது அல்ல

### - எதிர்க்கட்சித்தலைவர் ரணில் கூறுகிறார்

(கொழும்பு)

அமைதி முயற்சிகளில் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் மேற்கொள்ளப்பட்டிருப்பது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரானது அல்ல. அது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அமைதி முயற்சிகளுக்கான சர்வதேச சமூகத்தினது ஆதரவைக் கோருவதற்கும் சிறிலங்காவை மீளக்கட்டியெழுப்பி-அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவே சர்வதேச வலைப்பின்னல் உருவாக்கப்பட்டுள்ளது. என எதிர்க்கட்சித்தலைவரும் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு ரணில் அளித்துள்ள நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதன் மூலம் யுத்தம் தடுக்கப்பட்டுள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இரத்து செய்யப்போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ள போதும் அதன் தலைவரான சந்திரிகா குமாரதுங்க ஒப்பந்தத்தைப் பாராட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வலுவான அடிக்கல்லாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமைந்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலமே குறிப்பிடத்தக்க அமைதியை உருவாக்க முடியும்.

ஐக்கிய தேசியக்கட்சி முன்வைத்துள்ள கூட்டாட்சி முறைக்கு மாற்றான ஒரு தீர்வை முன்வைக்க எதிர்த்தரப்பினர் தவறிவிட்டனர்.

கூட்டாட்சி தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது நாம் தொடக்கம் முதலே சந்தேகம் கொண்டால் அவர்கள் தனியரசுக் கோரிக்கையைத் தான் வலியுறுத்த நேரிடும்.

எம்மை அமெரிக்க ஆதரவாளராக முத்திரை குத்துகின்றனர் சிலர், சிறிலங்காவின் பொருளாதார, அரசியல் நன்மை கருதியே நாம் செயற்படுகின்றோம். அதனடிப்படையில்தான் அமெரிக்காவுடன் நாம் உறவை வைத்துள்ளோம். அமைதி முயற்சிகள் தொடர்பாக அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுகிறோம். அமைதி முயற்சிகளில் ஈடுபாடு கொண்ட அமெரிக்கா இப்போது டோக்கியோ இணைத்தலைமை நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது.

சிறிலங்காவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான இராணுவ, வர்த்தக உறவு மேம்பட்டுள்ளது. சிறிலங்கா இராணுவத்துக்கான உதவிகளை- கடலோர காவற்படை உள்ளிட்டவற்றை அமெரிக்கா அளித்துள்ளது. மற்றவர்கள் இதைச் செய்யத்தவறியதால் எம்மை அமெரிக்க ஆதரவாளர்கள் என்று அழைக்கின்றனர்.

இந்தியாவுடன் எமக்கு நெருக்கமான உறவு உண்டு. எந்த ஒரு சிறிலங்கா அரசாங்கமும் இந்தியாவுடன் நெருக்கமான உறவை மேற்கொள்ள வேண்டும். நமது அண்டை நாடான இந்தியா நமக்கு அச்சுறுத்தல் நாடு அல்ல. நாம் ஆட்சிப்பொறுப்பில் இருந்த இரண்டு ஆண்டுகாலமும் இந்தியாவுடன் இணைந்து நிறைய செயற்பாடுகளை மேற்கொண்டுள் ளோம். இந்தியாவுக்கும் சிறிலங் காவுக்கும் இடையே கலாச்சார உறவுகள் உண்டு. இந்தியாவிலி ருந்துதான் சிறிலங்காவுக்கு புத்தமதம் வந்தது.

சிறிலங்காவின் அமைதி முயற்சிகளில் இந்தியா எப்போதும் ஈடுபாடு காட்டி வந்துள்ளது. நாம் பிரதமராக இருந்த காலத்தில் 2003 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சுக்களை நடத்தினோம். ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்பில் இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய இணக்கமான தீர்வுக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று அவர் உறுதியளித்திருந்தார் என்றார்.

# இலஞ்ச ஆணைக்குழுவை கேள்விக்குள்ளாக்க மங்களசமரவீரவுக்கு அதிகாரமில்லை

### –பேராசிரியர் கொல்வின் குணரத்ன

(கொழும்பு)

சிறிலங்கா இலஞ்ச ஆணைக்குழுவின் நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்க அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அதிகாரம் இல்லை என்று அரசியல் சபையின் உறுப்பினர் பேராசிரியர் கொல்வின் குணரத்ன விமர்சித்துள்ளார்.

இலஞ்ச ஆணைக்குழு என்பது சுயாதீனமான அமைப்பு .அதன் விவகாரங்களில் எந்த அரசியல்வாதியும் குடிமகனும் தலையிடும் உரிமை இல்லை. இலஞ்ச ஆணைக்குழு மீது அதிருப்தியடைகின்ற நபர் அரசியல் சபையிடம் முறைப்பாடு செய்ய வேண்டும். இலஞ்ச ஆணைக்குழு மீது முழு அதிகாரம் கொண்ட அமைப்பு அரசியல் சபை அல்லது சட்ட ரீதியாக வழக்குத் தொடரலாம் அதை விடுத்து சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொள்ள எவருக்கும் அனுமதி இல்லை.

அவர் அரசியல்வாதியாக இருந்தாலும் பிச்சைக்காரராக இருந்தாலும் இலஞ்ச ஆணைக்குழு மீது அதிருப்தி இருக்குமேயானால் அரசியல் சபையிடமே முறையிட வேண்டும் என அவர் தெரிவத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதான அமைச்சர் மங்கள சமரவீரவின் கணினி கொள்வனவு மோசடி தொடர்பான முறைப்பாட்டை இலஞ்ச ஆணைக்குழு நிராகரித்ததையடுத்து ஆணைக்குழுவை அவர் கடுமையாக விமர்சனம் செய்து வந்தார். இந்த நிலையில் மங்கள சமர வீரவின் செயற்பாட்டைக் கண்டித்தே கொல்வின் குணரத்ன இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸ் விளம்பரத்துக்கு ரூபவாஹினி தொலைக்காட்சி மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் விளம்பரத்தை ஒளிபரப்ப ரூபவாஹினி மறுத்துவிட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் விளம்பரத்தில் மறைந்த அஸ்ரப்பின் காட்சிகள் இடம்பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் அவரது குடும்பத்தாரிடம் அனுமதி பெறவேண்டும் என்றும் ரூபவாஹினி தலைவர் சுஹைர் கூறியுள்ளார்.

இதனால் முஸ்லிம் காங்கிரசின் விளம்பரம் ஒளிபரப்பு செய்யப்படவில்லை. முஸ்லிம் காங்கிரசின் விளம்பரம் நிராகரிக்கப்பட்டதன் மூலம் பல இலட்சம் ரூபா விளம்பர வருவாய் ரூபவாஹினிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக அதன் ஊழியர்கள் தெரிவித்தனர்.

# கதிர்காமரைக் கொன்றது ஜே.வி.பிதான் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தமிழர்கள் முறைப்பாடு

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொன்றது சிங்களப் பேரினவாத அமைப்பான ஜே.வி.பி தான் என்று ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஐரோப்பா வாழ் தமிழர்கள் முறைப்பாட்டு மனு ஒன்றை அளித்துள்ளனர்.

அமைதிக்கான ஐரோப்பிய தமிழர் முன்முயற்சி அமைப்பின் சார்பில் கையளிக்கப்பட்ட மனுவில் இவ்வாறு முறையிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பின்னர் தமது அரசியல் அபிலாசைகளுக்கு லக்ஷ்மன் கதிர்காமர் தடையாக இருப்பார் என்பதால் ஜே.வி.பியினர் அவரைப் படுகொலை செய்துள்ளனர்.

தமது கவனத்திற்கு வராமல் ஜே.வி.பி.யுடன் எதுவித சந்திப்புகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று கதிர்காமருக்கு சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டிருந்தார்.

இருப்பினும் சந்திரிகாவின் அரசியல் சகாப்தம் முடிவடைவதால் ஜே.வி.பியுடன் கதிர்காமர் நெருக்கமான உறவுகளையே கொண்டிருந்தார்.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவுடன் தனது அரசியல் எதிர்காலத்தைத் தொடர லக்ஷ்மன் கதிர்காமர் திட்டமிட்டிருந்தார்.

லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட இரு மணிநேரம் கழித்தே அந்நாட்டினது பொலிசார் அவரது இல்லத்திற்கு சென்று சோதனையிட்டனர். நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை.

இந்தப் படுகொலையில் சிறிலங்கா அரசுக்கும் பாதுகாப்புத் தரப்பினருக்கும் தான் தொடர்புள்ளது.

ஸ்கொட்லாந்து யார்ட் புலனாய்வுத்துறையினர் இந்தப் படுகொலை தொடர்பில் விசாரணையை நடத்த முன்வந்தபோது சந்திரிகா குமாரதுங்க ஏன் மௌனம் காத்தார்?

கதிர்காமர் படுகொலையைக் காரணம் காட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் பயணத்தடையை விலக்க வேண்டும்

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நீடிக்கவும், அமைதி முயற்சிகள் தொடரவும் ஐரோப்பியஒன்றியமானது விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைக்கக் கூடாது. இங்கிலாந்து நாட்டில் விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட வேண்டும். தமிழ் அரசியல் தலைவர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் மீதான படுகொலைகள் தொடர்பாக சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் கருத்துக்கணிப்புக்களில் தகவல்

(கொழும்பு)

தனியார் நிறுவனங்கள், ஹிந்துஸ்தான் ரைம்ஸ், தேசிய உளவுப் பிரிவு, ரிசர்வ் இன்டர்நசனல் ஆகியன தேர்தல்தொடர்பாக நடத்திய கருத்துக் கணிப்பில் ஐக்கியதேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறக்கூடும் என்றும் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் இருக்கும் தங்களின் கிளைகள் மற்றும் பாவனையாளர்களின் பங்களிப்புடன் முன்னணி நிறுவனங்களும், சுயாதீன அமைப்புகள், இந்திய பத்திரிகையான இந்துஸ்தான் ரைம்ஸ், தேசிய உளவுப்பிரிவு ஆகியன ஆய்வினை மேற்கொண்டன.

செலிங்கோ நிறுவனம்,இலங்கை புகையிலை நிறுவனம், வரையறுக்கப்பட்ட சிங்கர் நிறுவனம், லயன் புருவரி நிறுவனம், ஹட்டன் நசனல் வங்கி ஆகியன தங்களின் ஆய்விற்கமைய அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளன.

# மிலிந்தமொறகொடவின் உயிருக்கு அச்சுறுத்தலாம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொடவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்காப் பிரதமர் மகிந்தராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் மிலிந்த மொறகொட எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் மகிந்த கேட்டுக் கொண்டுள்ளார்.தேசிய பாதுகாப்பு சபையினருடன் அண்மையில் மிலிந்த மொறகொட ஆலோசனை நடத்தினார். அவரது பாதுகாப்பு இருமடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ மற்றும் இந்திய புலனாய்வு அமைப்பான றோ ஆகியவற்றின் உளவாளியாக மிலிந்த மொறகொட செயற்படுவதாகக் கூறி அவரது உயிருக்கு குறிவைக்கப்பட்டிருப்பதாக சிறிலங்காப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் கடும் மழை காரணமாக இடப்பெயர்வு

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்கில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் இடைக்காலக் குடியிருப்புக்கள் சிலவற்றில் மழை வெள்ளம் உட்புகுந்ததையடுத்து பல குடியிருப்புக்களிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர். மக்களுக்கான நலன்புரிநிலையங்களை ஏற்படுத்தி அந்த மக்களுக்கு வேண்டிய அனைத்துத் தேவைகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் இரவிலிருந்து இடைவிடாது பெய்த தொடர்ச்சியான பெருமழையினால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் காரணமாகவே மக்கள் இடம்பெயர நேர்ந்துள்ளது. சுனாமிப் பேரலை தாக்கி 11 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் தங்களுக்கான நிரந்தர வாழ்விடங்களை அமைத்து இழந்து போன வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பமுடியாது பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வாழ்ந்துவந்த மக்கள் மீண்டும் ஒரு இடப்பெயர்வைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

தாளையடி, செம்பியன்பற்று, மாமுனை, மருதங்கேணி ஆகிய இடங்களிலுள்ள இடைக்காலக் குடியிருப்புக்களிலுள்ள குடிமனைகளுக்குள்ளேயே வெள்ளம் புகுந்து இந்த அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளன. தற்போது சில நலன்புரி நிலையங்களில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளான உணவு, சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து எனப் பல்வேறு தேவைகளை தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் வடமராட்சி கிழக்கு சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் தொண்டர்கள் நேரடியாக நின்று கவனித்து வருகின்றனர்.

இதேவேளை தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வெள்ளம் அதிகரித்தே காணப்படுகின்றது. அத்துடன் கடல் நீர்மட்டமும் உயர்ந்து காணப்படுவதால் குடியிருப்புக்களிலுள்ள வெள்ளநீர் வடிந்து குறைவதற்கான வாய்ப்புக்களும் குறைந்தே இருந்துவருகின்றன. மேலும் மக்கள் மழை வெள்ளத்தால் இடம்பெயரக்கூடுமென்ற எதிர்பார்ப்புடன் மக்களுக்கு வேண்டிய தேவைகளைப்பொறுத்து முன்னேற்பாடான நடவடிக்கைகளிலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் ஈடுபட்டுள்ளனர். (லோ)

# மகிந்த வெற்றிபெற்றால் அநுரா மீது நடவடிக்கை

(கொழும்பு)

ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக வெளிநாட்டமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா செயற்படாதபடியால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அநுராபண்டார நாயக்கவின் அரசியல் நகர்வுகள் யாவும் எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு சாதகமாக உள்ளன. ஆகவே அநுராவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு மார்க்கங்கள் இல்லை. அநுராவின் இந்த அரசியல் நடவடிக்கைகளால் மகிந்த ராஜபக்ஷ வென்றால் இவருக்கு பிரதமர் பதவி வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் தினத்தன்று முகமாலையூடான போக்குவரத்து வழமை போல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் தினத்தன்று முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியூடாக போக்குவரத்துக்கள் வழமைபோலவே நடைபெறும் என்று யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கூறியுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம்திகதி நடைபெறவுள்ள சனாதிபதித்தேர்தல் வாக்கெடுப்புக்காக முகமாலையில் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

இவ் வாக்குச் சாவடிகள் அமைப்பதன் காரணமாக ஏற்படக் கூடிய பாதுகாப்பு நெருக்கடி மற்றும் போக்குவரத்து நெருடிக்கடிகள் காரணமாக முகமாலைச் சோதனைச் சாவடியூடான போக்குவரத்து தடைப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் எந்தக் காரணங்களுக்காகவும் சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு தினத்தில் முகமாலை சோதனைச் சாவடியூடான பொதுமக்களது போக்குவரத்துச் சேவைகளோ பொதி பரிமாற்ற சேவைகளோ நிறுத்தப்படாது. அவை வழமை போல இயங்கும் என்றும் அரச அதிபர் மேலும் கூறினார். (33)

---

## கொத்தணி...

பாதுகாப்பு அமைச்சு மற்றும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஆகியோருடன் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

அதன் பின்னர் மொத்த வாக்களிப்பு நிலையங்களை 6.24 இலிருந்து 220 ஆகக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புக்காரணங்களைச் சுட்டிக்காட்டி பாதுகாப்பு அமைச்சகம் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகளின் எண்ணிக்கையினால் தேர்தல் பணிகளுக்கு இடையூறு ஏற்படாது என்று நாம் கருதுகிறோம். அனைத்து அரச ஊழியர்களும் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்

இவற்றுக்கான பாதுகாப்பை பொலிசாரே நேரடியாக வழங்கினாலும் 500 மீற்றர் தூரத்துக்கு அப்பால் நின்று இராணுவம் பாதுகாப்பை வழங்கும். வாக்களிப்பு நிலையங்களில் அசம்பாவிதங்கள் ஏதேனும் நிகழ்ந்தால் பொலிசாருக்கு உதவியாக வாக்களிப்பு நிலையத்தின் 500 மீற்றர் தூரத்துக்குட்பட்ட பகுதிக்கு இராணுவத்தினர் அழைக்கப்படுவர் என்று அரச அதிபர் கணேஷ் மேலும்கூறினார். (33)

## தேர்தலைப்...

தேர்தல் நாளான நவம்பர் 17ஆம் திகதிதமிழ் மக்கள் தங்கள் வீடுகளிலேயே இருந்து தேர்தலில் பங்கேற்காமல் புறக்கணிப்புச்செய்ய வேண்டுகின்றோம்.

தேர்தல் புறக்கணிப்பை முழு அளவில் மேற்கொண்டு தமிழரது நியாயத்தை வெற்றி பெறச் செய்வோம் என்றுஅந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சிறிலங்காவின்...

*இந்தியா-சிறிலங்கா உறவை* வலுப்படுத்த சந்திரிகா மேற்கொண்ட நடவடிக்கைகளை மன்மோகன்சிங் *நினைவு கூர்ந்தார் என்றார் சியாம்* சரண்.

---

## தேர்தலில்...

இந்த விளம்பரம் எதுவித வர்த்தக நோக்கத்துக்காகவோ, எந்தப் பொருளின் அறிமுகத்துக்காகவோ வெளியிடப்படவில்லை மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதற்காக மட்டுமே வெளியிட்டுள்ளன.தேசிய லொத்தர் சபை, சிறிலங்கா ஏற்றுமதி நிறுவனம், நகரமைப்புசபை, மகா நகுமசாலை கட்டமைப்பு நிறுவனம் (தனியார்) சிறிலங்கா கப்பல் கழகம் உள்ளிட்டவை இந்த விளம்பரங்களை வெளியிட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ஷவை முன்னிலைப்படுத்த நேரடியாக அரசாங்கத்தின் நிதி செலவிடப்பட்டுள்ளமை தெளிவாக வெளிப்பட்டுள்ளது. இது இலஞ்ச ஆணைக்குழு சட்டங்களின் கீழ் விசாரணைக்குரியது. தேர்தல் சட்டங்களின் கீழும் இது குற்றமாகும். எனவே மகிந்த ராஜ பக்ஷ மீதும் இலஞ்சஆணைக்குழு விசாரணை நடத்தவேண்டும் என்றார் பாலித அத்துக்கோரளை.

## நாடகப்...

மேற்படி போட்டியில்வெற்றி பெற்ற கிளி.மகாவித்தியாலய மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும்கல்விச் சமூகத்தினர் பாராட்டியுள்ளனர். (கு)

## ஈ.பி.டி.பி...

ஜே.எல்.பி.சமிந்த (வயது 31) என்பவர் படுகாயமடைந்துள்ளார். இவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாக வெள்ளவத்தைப் பொலிசார் கூறியுள்ளனர்.

---

## தமிழ்...

ஊடாகவும் மாகாணக் கல்வி பணிமனை ஊடாகவும், கல்வி அமைச்சு ஊடாகவும், நடவடிக்கைகளை எடுத்து அவற்றுக்கான தீர்வை கண்டறியவதென முடிவெடுக்கப்பட்டது.

அத்தோடு வடக்கு கிழக்கு கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் அரச சார்பற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதலால் இது வடக்கு கிழக்கில் நிலவும் கல்வி சார் பிரச்சினைகளுக்கு அரசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு வளங்களைப் பெற்று தீர்வுகாண நடவடிக்கை எடுக்க முயற்சிகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது. இச் செயலமர்வில் வடக்கு கிழக்கில் நிலவும் கல்வி ரீதியான அத்தியாவசிய வளங்களின் பற்றாக்குறைகளை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் விளக்கினார்.

அதாவது ஆசிரியர் பற்றாக்குறை, அதிபர்கள் பற்றாக்குறை, கல்விப் பணிப்பாளர்கள் பற்றாக்குறை என்பனவற்றையும் அவர் விளக்கினார். அத்தோடு இச் செயலமர்வின் மூலம் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை உடனடியாகத் தீர்ப்பதென இதில் கலந்து கொண்ட கல்விமான்கள் அனைவரும் உறுதிகூறினர்.

இச் செயலமர்வில் வடக்கு கிழக்கு கல்வி மேம்பாட்டுப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா, வடக்குக் கிழக்கு கல்வி மேம்பாட்டுச் செயலாளர் தியாகலிங்கம், வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், தேசிய கல்வி நிறுவன பாட இணைப்பாளர்கள், வவுனியா யாழ்ப்பாண பல்கலைக் கழகங்களின் விரிவுரையாளர்கள், கல்வியியற் கல்லூரிகளின் பீடாதிபதிகள், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர் பிரான்சிஸ் யோசப் அடிகளார், தமிழர் ஆசிரியர் கள்.சங்க நிர்வாகப் செயலாளர், வடமாகாண அதிபர் சங்கத் தலைவர் சேதுராசா செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன பிரதிநிதி, பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இச் செயலமர்வில் கலந்து கொண்டோருடன் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் நேற்று கலந்துரையாடியமையும் குறிப்பிடத்தக்கது. (சகு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.